உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௫௧.] மன்மத-௵-ஐப்பசி௴ [பகுதி-௧௨.

Vol. 51, October-November—1955. No. 12.

உள்ளுறை

காரைக்குடிக் கம்பர் விழாவில் நிகழ்த்திய தலைமையுரை: 353

மு. இராகவையங்கார்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் புதிய அமைப்பு விதிகளும்
தமிழ்க்கலைஞர் மன்ற (Tamil Acadamy) விதிகளும்

செந்தமிழ் 51-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா 8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற ஐம்பத்தோரு வருட காலமாகத் தமிழ்மொழியின் வளர்ச்சிகருதி மாதம் ஒரு முறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகை யானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரிய விஷயங்களை எளிதில் எல்லோரும் உணர வெளியிடும் பெருமை வாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ் நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங் கொண்டே இப்பகுதியோடு ஐம்பத்தோராந்தொகுதி முற்றுப்பெற் றிருக்கிறது. இனி, ஐம்பத்திரண்டாந்தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது மன்மத௵ தைமீ 15௳க்குள் வெளி வரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப் பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமி ழைச் சிறப்பித்து வரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

குறிப்பு:—ஐம்பத்திரண்டாந் தொகுதிச் சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர், நாளிது மன்மத௵ தைமீ 15௳க்குள் இச்சங்கம் ஆபிசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வாராவிட்டால் 52-ஆம் தொகுதி யின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பிய பின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பி விடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயைசெய்து வி. பி. யைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

25—12—55
மதுரை.

S. சிவஸ்வாமி, மானேஜர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி—ருக.] மன்மத-ஞு—ஐப்பசிமீ [பகுதி—கஉ.

Vol. 51. October-November—1955. No. 12.

பேராசிரியர்: மு. இராகவையங்கார்

காரைக்குடிக் கம்பர்விழாவில் நிகழ்த்திய *தலைமையுரை

—o—

தமிழறிஞர்களே, அன்பர்களே, சகோதரிகளே!

காரைக்குடிக் கம்பன் கழகத்தார் இன்று பிற்பகுதியில் நிகழும் தமிழறிஞர் பேரவைக்கு என்னைத் தலைமை வகிக்கும்படி நியமித்தது, நான் அடைதற்கரிய பெரும்பேறுகளுள் ஒன்றாகும். இப்பெரிய கௌரவத்தை அளித்த கழகத்தார்க்குப் பெரிதும் நன்றியறிதலுடையேன்.

இன்று என் தலைமையில் தமிழ் அறிஞர்கள் நால்வர் உபந்நியாசங்கள் நடக்க இருக்கின்றன. அவை: 1. கம்பரும் வள்ளுவரும், 2. கம்பரும் இளங்கோவும், 3. கம்பரும் திருத்தக்கதேவரும், 4. கம்பரும் சேக்கிழாரும் என்பன. இவர்களுள் முதலில் கூறப்படும் கம்பரும் வள்ளுவரும் என்ற இவ்விரு பெரும் புலவர்களும் தமிழ்க்குக் கதி என்று சிறப்பிக்கப்பட்டவர்கள்.

திருவள்ளுவரைத் தெய்வப்புலவர் என்று விசேடித்தே முன்னோர் பலரும் கூறுவதை வள்ளுவமாலை போன்ற பழைய நூல்களால் நன்கு அறிவோம். பின்னோர் பாடல்களும் உரைகளும் இவ்வாறே அவரைச் சிறப்பிக்கின்றன.

தெய்வப்புலமை என்பது மக்களியல்புக்கு மேற்பட்ட புலமை என்று பொருள்படும். தெய்வத்தன்மை வாய்ந்த அப் புலமையைச்

*காரைக்குடிக் 'கம்பன் கழகம்' இரண்டாம் நாள் 5-4-55 மாலை நிகழ்ச்சி.

சங்கத்துச் சான்றோரும் பிறரும் வள்ளுவனாரிடம் கண்டு அவரைத் தெய்வப்புலவர் என்று வழங்கலாயினர். பொய்யா மொழியார் என்ற முன்னோரை அவரது பெரும்புலமைநோக்கி 'நீர் நல்ல புலவர்' என்று பாண்டியன் ஒருகாற் பாராட்டியபோது அவர்

"அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்"

என்று விடைபகர்ந்தனர் என்று தமிழ் நாவலர் சரிதையில் ஒரு பாடலுண்டு. இதனுள் முதலில் அறம்உரைத்தான் என்றது 'அன்றாலின் நீழல் அறமுரைத்தான்' ஆகிய சிவபிரானை. அவர் புலவரெனப்பட்டது, சங்கத்தில் தலைமை வகித்த நிலைமையிலாகும். 'இறையனார் ஆகிய அவரையும் குறுமுனியாகிய அகத்தியனாரையும் வள்ளுவனாரையும் புலவர் எனல் தகுமேயன்றி என்போலியரை அவ்வாறு கூறல் ஏற்காது' என்பது இப்பாடற் கருத்து.

புலவர் என்பதற்கே இத்துணைக் கௌரவம் அளித்த முன்னோர், 'தெய்வப் புலவர்' என்பதற்கு எவ்வளவு சிறப்புத் தந்திருத்தல் வேண்டும்? இறையனாரும் அகத்தியனாரும் ஆகிய தெய்வத்தையும் தெய்வத்தன்மை யுடையாரையும் நீக்கி நோக்குமிடத்து,

"புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்"

தகாது என்றே புலப்படும்.—(வள்ளுவமாலை 34)

இவற்றான் தெய்வப்புலமை என்பது, என்றும் நிலைத்துள்ள இம்மைமறுமைத் தத்துவங்களை உள்ளபடி உணர்ந்து அவற்றைச் செவிக்கினிய செஞ்சொற்களால் சுருங்கவிளங்கக் கூறும் பெருந்திறமாகும். இத்தகைய புலமையை அவ்விறையனாரே பாடிய வள்ளுவமாலை, முதற்பாட்டு[1] உவமைமுகத்தால்

---

1 "சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது வென்ற, வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன், முதற்கவி பாடிய முக்கட் பெருமான்" என்பர் கல்லாடர். இதனால் வள்ளுவமாலையின் முதற்பாட்டு இறையனார் பாடியதென்பதே பழையகொள்கை என்பது தெரியலாம். இப்போது, அசரீரி பாட்டும் நாமகள் பாட்டும் முதற்பாட்டுக்களாக வழங்குகின்றன. இது கல்லாட ஆசிரியர் வாழ்ந்த உத்தேசம் 9, 10—நூற்றாண்டு வழக்கன்று என்க.

"என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்"

என்று விளக்குதல் அறியத்தகும். புலவர் தலைவராய வள்ளுவர் வாக்கானது, தெய்வதருவான கற்பகத்தின் திருமலர்போலும் என்பது இதன் கருத்து. அத்திருமலர் என்றும் வாடாதது; எத்தனை காலம் கழியினும் மலர்ந்த நிலையிலே நிற்பது; தேனை இடையறாது ஒழுக்குவது; செந்தளிர்களின் செழுமை குன்றாதது—இத்தகைய அரிய தன்மைகள் வாய்ந்ததென்று சிறப்பிக்கப்படுகின்றது.

இவ்விசேடணங்களிலிருந்து, வள்ளுவர் குறளும், சொல் தொடை நயங்களால் என்றும் வாடாததும், பொருளாகிய பூம்போது எப்போதும் அலர்ந்து நிற்பதும், யாப்பமைதி போன்றவற்றாற் செழிப்புற்றுத் திகழ்வதும் ஆகிய தன்மைகள் வாய்ந்ததென்பது பெறப்படும். இச் சிறப்புக்கள் சான்றோர்பாடல் எல்லாவற்றுக்குங் கூறத்தக்கன வல்ல என்பதே இறையனர் திருவுள்ளமாம். அச் சான்றோர்கள் 'உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பினை' உடையவர்களாயினும், அவர்களிற் பெரும்பாலார் அரசர் தலைவர்களைப் பாடிப் பரிசுபெற்று, வறுமைக்கஞ்சிவாழ்ந்த மானிடப் பெருங்கவிஞர்களாகவே முன்னோர் கருதினராதல் வேண்டும். மாங்குடி மருதனர் பாடிய மதுரைக் காஞ்சியை

"சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலான்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்"[1]

என்று சிறப்பித்தனர் அக்காலப் புலவரொருவர். இதனுள் சொற்களாகிய பூம்போதுகளும் பொருளாகிய தீந்தாதுக்களு முடைய மல்லிகை மாலையாகவே அக் காஞ்சிப்பாட்டுக் கூறப்பட்டுள்ளது. இதனல் பெரியாரான அம் மருதனர் வாக்கும் 'தெய்வத் திருமலர்' என்று சிறப்பிக்கப்பட்டிராமை குறிப்பிடத்தக்கது. கம்பநாடரும்

[1] பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி யிறுதிப்பாடல்.

"எற்பொரு ணாகர்த மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது"—(பம்பை. 6.)

என்று அத் தெய்வப்பாடல்களைச் சிறப்பிப்பர். பம்பைப் பொய்கையானது நாகருலகத்தையும் காட்டக்கூடியபடி தெள்ளத் தெளிந்த நீருடையதாயினும், அடித்தரைகாண மூழ்குவோர்க்கு, உத்தமக் கவிஞர்கள் நாட்டிய சொற்பொருள்கள் போல ஆழம்பெரிதுடையதாம் என்பது கருத்து.

"சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி"—என்றும்
"சொல்லாயுந் தோறும் பொருளாழ்ந்து"—என்றும்

வருவன இக்கருத்துப் பற்றியனவே. இப்பாட்டினுள் 'கற்பகமனைய' என்ற விசேடணம் கவிஞர் என்பதனுள் உள்ள கவி என்பதற்கே உரியதாகும். கற்பகம் அனைய...சொற்பொருள் என அதனைச் சொற்பொருளுக்கு அடையாக்குதல் கூடுமேனும், அஃது உவமைக்கு உவமையாய் அணி வழுவாம். இனி, அத் தொடரில் கவிஞர் என விகுதிப்பொருளான புலவர்க்குக் கற்பகத்தை அடையாக்குதலும் சிறவாது. அவ்வாறாயின் 'கற்பகம்போன்ற கொடையாற் சிறந்தவர் புலவர்' என்ற பொருள் பயந்து, வேண்டா கூறல் ஆகும்; ஆகவே கற்பகம் அனைய கவி எனப் பகுதியில் நோக்குடையதேயாம்.

"செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர்"—(நகரப்-1)

என்ற கம்பர் வாக்கினும், 'செவ்விய' முதலிய விசேடணங்கள் கவி என்பதற்கே உரியவாதலும் ஒப்பிடத்தக்கது. கற்பகம் என்றது அதன் மலரை. எனவே இறையனார் கூறிய கற்பகத்திருமலருவமையையே தெய்வப் புலமைக்கு நம் கவியரசரும் கூறினர் ஆயிற்று.

இனி முன்னோரிற் பலர், முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக்கவிகளாக உளரே; அவரெல்லாம் எத்தகையரோ? எனின், இவ்விடத்தே கம்பரது வேறுநூற் பாடலொன்று அதற்குத் தக்க விடைபகரக் கூடியதாகின்றது. அவரருளிய சடகோபரந்தாதியுள்

"நாவலர் தீவிற் கவிகளெல் லாம்சில நாள்கழியப்
பூவலர் தீய்வது போல்வதல் லாற்குரு கூர்ப்புலவன்
கேவலர் தீங்கறுப் பான்கவி போலெங்கும் போய்க்கொழுமிக்
கூவலர் தீம்புன லுங்கொள்ளு மோவெள்ளங் கோளிழைத்தே[1] (58)

என்ற பாடல் நோக்கத்தரும். இந் நிலவுலகிற் பேர்பெற்ற புலவர்கள் இயற்றிய கவிகளெல்லாம் நறுமலர்கள் போன்றனவே; அம்மலர்கள் தம் அழகாலும் நன்மணங்களாலும் உலகோர் விரும்பித் தலைமேல் வைத்துக் கொண்டாடும் பொலிவுடையன. ஆனால் காலங் கழியக் கழிய அவையாவும் தம்பொலிவும் அழகுங்குன்றி மறையக்கூடியவை. அன்னவை போலன்று, சடகோபர்தம் திருவாக்கு. அவ்வாக்கின் வெள்ளம் பெருக்கெடுத் தோடியநிலையில், முன்னோர் பாக்களான கிணற்றுநீரையும் ஒருசேர அஃது அடித்துக்கொண்டு போய்விட்டது என்பது இதன் கருத்து. ஆகவே மல்லிகை முல்லை முதலிய நறுமண மலர்களாகவே ஏனையோர் வாக்குக்களை நாம் கொள்ளத்தகும் என்பதும், அவை அவ்வக்காலச் சூழ்நிலைக்கேற்பச் சிறந்துவிளங்கிப் பின் பொலிவுகுன்றி மறையக்கூடியன என்பதும், அவைபோல்வனவல்ல தெய்வக்கவிஞர்களின் திருவாக்கென்பதும் இதுவரை கூறிவந்த முன்னோர் உவமைகளால் நன்கு விளங்கும்.

இத்தகைய தெய்வத் தன்மையைப் பிற்காலத்தில் காணக்கூடிய பெரியார்[2], கம்பர்பெருமான் ஒருவரே என்று நாம் சொல்லலாம். உத்தம மக்கள் ஆதற்குரிய உலகியலுண்மைகளை யெல்லாம் இலக்கண விதியாகவும் இலக்கிய உருவமாகவும் உணர்த்துவது

---

[1] இதுவே கருத்து "கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த தொவ்வாதோ" (விபீடணனடைக். 103) எனவும் "கூவலிற்புக்கு வேலை கோட்படு மென்ற கொள்கைபோல்" (பிராட்டி களங். 28) எனவும் வெவ்வேறிடங்களில் கம்பரால் அளப்படுதல் காண்க.

[2] கம்பர் தெய்வத்தன்மை வாய்ந்த புலவர் என்பதுபற்றி 'அமுதசுரபி' என்ற மாதபத்திரிகையில் தெய்வப்புலமை என்ற கட்டுரையுள்ளும் விளக்கியுள்ளேன்.

வள்ளுவரது முப்பால்.[1] அவ்வுண்மைகளை அவதாரமூர்த்தியான புருஷோத்தம னொருவனிடம் அமைத்து உணர்த்துவது கம்ப ராமாவதாரம். இராமாயண பாத்திரங்களுள், தம் காப்பியத்தலைவனை ஞானியர் திருவுள்ளத்தாலும் தம் கருத்தாலும் தெய்வாவதார மானவனே என்று கொண்டு இராமாவதார நூலைக் கம்பர் பாடிச் செல்கின்றார். அவ்வாறு செல்லுமுறையில் இம்மைக்குரிய உலகியலுண்மைகள் மட்டுமன்றி மறுமைக்குரிய உத்தம தத்துவங்கள் பலவற்றையும், ஆழ்வார்களைப்போலவே விளக்கும் பெருமை கம்பர் பெருமானிடம் நிரம்ப வுண்டு. வால்மீகி பகவான் தம் கதாநாயகனை லோகோத்தமனான புருஷனைச் சிருஷ்டித்துக்கொண்டு அம்முறையே தம் மகாகாவியத்தைப் பெரும்பாலும் நடத்திச் செல்வர். கம்பநாடரோ, தம் காப்பியத் தலைவனைப் பரஞ்சோதியின் அமிசமாய் அயோத்தியில் ஓர் அணி விளக்காகத் தோன்றியவனென்றும், ஆனால் மக்களில் ஒப்புயர்வற்றவனாக விளங்கி உலக நெறிகளை நடித்துக் காட்டியவனென்றும் கொண்டு, உரியவிடத்தெல்லாம் அவற்றை விசித்துச்செல்வர். இராமாவதாரம் என்று தம் பெருங்காப்பியத்துக்கு அவர் பெயர்சூட்டியதும் இதுபற்றியேயாம். திருமாலவதாரம் பத்தினுள், பரசுராம ரகுராம பலராமர்களின் இடையில் நிகழ்ந்த ரகு ராமாவதார சரிதமே தாம் பாடப்புக்கதென்பதை.

> "நாயகன் தோற்றத்தின் இடைநிகழ்ந்த
> இராமாவதாரப்பேர்...........மாக்கதை"

என்பதனால் அவர் குறிப்பிட்டாளுதல் காணலாம்.

ரகுராமன் திருமாலின் ஏழாவது அவதாரமே; அதனால் நாயகன் தோற்றமான தசாவதாரங்களுள் இடைநிகழ்ந்தது என்று அதனைக் கொள்ள இயலாது. எனவே ஙாம ராம ராம என்ற மூன்றவதாரங்களுள் இடைப்பட்ட ரகுராமாவதாரமே தாம் பாடப்புக்கதென்பது அவர் கருத்தாகும்,

---

[1] இலக்கிய இலக்கண வுருவமான நூல்களைத் 'தாயபனுவல்' என்று கூறுவர் தொல்காப்பியனார்.

இவ்வாறு தெய்வமே அவதரித்துப் புரிந்த மானிடப் பெருஞ் செயல்களைச் சடகோப முனிவர்,

"நாட்டிற் பிறந்தவர் நாரணற் காளன்றி யாவரோ
நாட்டிற் பிறந்து படாதன பட்டு மனிசர்க்கா
நாட்டை நலியும் அரக்கரை நாடித் தடிந்திட்டு
நாட்டை யளித்துய்யச் செய்து நடந்தமை கேட்டுமே" (7-5-2)

என்று பாடியருளினர். இம்முறையில் கம்பர் பெருமானும் தம் இராம பத்திமிகுதியால் காப்பியத்தை நடத்திப்போவதை நாம் நெடுகவே காணலாம். இவரது பத்திப் பெருக்கை

"பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

என்ற அவர் பாயிரப்பாடலே குறிப்பிடவல்லது. பித்தர் குழுவிலும் பேதையர் குழுவிலும் கம்பர் சேர்ந்தவரல்லர் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் அப்பித்தர் பேதையர்போலப் பத்தர் செயல்களும் சிற்சில சமயங்களில் தன்வசமிழந்து நிகழ்வதுண்டு. அதனால், அப்பத்தர் இனத்திற் சேர்ந்த தமக்கும் அத்தன்மை அமையக்கூடும். ஆதலின் அவற்றை நல்லோர் பொருட்படுத்தா ரென்பதே இவரது அவையடக்கக் கருத்து. பத்திபரவசத்தால் இவர்பாடிய சரிதநிகழ்ச்சிகளும் பாடல்களும் பலவாம். இச் சிறப்புப்பற்றியே

"அம்பரா வணிசடை யரனயன் முதல்
உம்பரால் முனிவரால் யோக ராலுயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருத்தி ருத்துவாம்" (பாயிரம்)

என்றார் ஓர் அபியுக்தர்.

தேவர் முதலியோராற் பிணித்தற்கரிய இராகவ குஞ்சரம் தானே வலியவந்து கம்பராகிய கட்டுத்தறியில் நின்றுகொண்டு, தன்னைக் கட்டுண்ணப் பண்ணியது என்பது இப் பாடற் கருத்து. இப்பத்தியின் பெருக்குப்பற்றியே 'கம்பநாட்டாழ்வான்' 'தெய்வப் புலமைக் கம்பநாட்டாழ்வார்' 'ராகவ அபிநவ கவிநாதன்' என்று முன்னோராற் சிறப்பிக்கப்படலாயினர் கம்புலவர் என்க. இனி இவரருளிய இராமாவதாரத்தை இலக்கியமுறையில் ஆராயப்புக்கால்

"கடல் கண்டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்"
(இட் - தானைகாண். 34)

என்று சேனைப்பெருக்கை ஓரிடத்தில் இவர் சிறப்பித்த முறையே நாமும் சொல்ல நேரிடும்; இவரது காப்பியக் கடலை

"எற்றுங்கு மேனி ரகுராம சரிதை யாவும்
கற்று ஆர்கலியிற் பெரிதாந் தமிழ்க் கம்பநாடன்
உற்றுங் குரைத்தான்" (இரகு வமிசம்)

என்றார், அரசகேசரியார் என்ற பெரும் புலவரும். இதனால் உலகில் வழங்கிய இராமசரிதங்களையெல்லாம் கற்றாராய்ந்தே கல்விக்கடலான கம்பர் தம் பாரகாவியத்தைப் பாடியவர் என்பது தெரியவரும். தெய்வப்புலவரான வள்ளுவனாரையும் ஏனைப் பெரும் புலவர்களையும் அத்தகைய கம்பநாடருடன் வைத்து, செந்தமிழ் வல்ல அறிஞர்கள் பலர் அடுத்து நிகழ்த்தப்போகும் உபந்நியாசங்களால், மேலே நான் கூறிவந்த உண்மைகள் யாவும் உங்கட்குத் தெளிவாகக் கூடியன.

[சொற்பொழிவுகள்]

மேற்கூறிய தலைமையுரை முடிவுபெற்றபின் முதலாவதாகக் "கம்பரும் வள்ளுவரும்" என்ற பொருள்பற்றித் திரு. அ. நடேசமுதலியாரும், இரண்டாவதாகக் "கம்பரும் இளங்கோவடிகளும்" என்பதுபற்றித் திரு. சிவஞான கிராமணியாரும், மூன்றுவதாகக் "கம்பரும் திருத்தக்கதேவரும்" என்பது பற்றித் திரு. கி. வா. ஜகந்நாத ஐயரும், நான்காவதாகக் "கம்பரும் சேக்கிழாரும்" என்பதுபற்றித் திரு. அ. ச. ஞானசம்பந்தனும் ஆகிய செந்தமிழறிஞர்கள் அரிய சொற்பொழிவாற்றினர்கள்.

இவர்களின் நாவன்மையும் ஆராய்ச்சிக் கருத்துக்களும் அவையோரையெல்லாம் பெரிதும் இன்புறச் செய்தன. இவர்களது சொற்பொழிவுகள் அவ்வவர் எழுதிய கட்டுரையால் நன்கறியக் கூடியன[1]. மூன்றுமணி நேரம் வரை இவை நடந்தேறியபின் முடிவுரை கூறப்பட்டது. அதன் சுருக்கமே இனி வருவதாகும்.

---

[1] இவை 'கம்பன் கழகத்'தாரால் அடுத்த ஆட்டை விழாவில் இக்கட்டுரையுடன் வெளியிடப் பெறும்.

முடிவுரை

அன்பர்களே!

நாவன்மைபெற்ற புலவர் நால்வர், நான்கு பெரும்பொருள் பற்றி நிகழ்த்திய அரிய சொற்பொழிவுகளை நீங்களெல்லோரும் கேட்டு ஆனந்தித்தீர்கள். அவற்றைச் செவியுற்று நான் அடைந்த மகிழ்ச்சிக்கும் அளவில்லை. இவற்றில் ஒவ்வொரு பொருளுரை பற்றியும் என் கருத்துக்களைக் கூறவேண்டி, நான் குறித்துக் கொண்டவை சில பல உண்டு. அவற்றை யெல்லாம் இப்போது எடுத்துக் கூறுவதாயின் நெடுநேரம்வரை இருந்து கேட்ட உங்கள் பொறுமையை மேலும் நான் சோதிப்பது போலாகும். அதனுல் சுருங்கிய காலத்தில் என் சொந்தக் கருத்துக்களில் குறிப்பிட்ட ஒருசிலவற்றையே கூறலாம் என எண்ணுகிறேன். அவற்றுள் மக்கள் பண்பாட்டுக்குரிய உத்தம நீதிநெறிகளை எடுத்தோதியவர் வள்ளுவனுர் என்றும், அந் நெறிகளை அவதாரமூர்த்தியான புருஷோத்தமன் ஒருவனிடம் அமைத்துக்கொண்டு தம் பாரகாவியத்தை இயற்றியவர் கம்பநாடர் என்றும் மேலே கூறினேன். இதற்குச் சிறந்ததோர் உதாரணம் திருக்குறளில் உண்டு. அஃது அறிஞர்கட்குப் புதியதுமன்று, அந்நூலின் படைச்செருக்கதிகாரத்தில்

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு" (773)

எனவரும் குறள் இங்கே குறிப்பிடத் தக்கது. 'போரில் எதிர்த்து நின்று புரியும் வன்கண்மைச் செயல்களையே பேராண்மை அல்லது உத்தமவீரம் என்பார்கள்; ஆனுல் அவ்வாண்மைச் செயலுக்குக் கூர்மையான (சிறப்பான) பாகம், எதிர்த்துநின்ற போரில் பகைவனது தளர்ந்தநிலை கண்டபோது அவனிடம் அன்புகாட்டிப் புரியும் உபகாரச் செயலே' என்பது இதன் கருத்து. இவ்வாறு வள்ளுவனுர் கூறியது, பழைய சரித்திரநிகழ்ச்சி யொன்றைக் குறிக்கொண்டதாகும். அவர் தம்நூலுள், முன்னிகழ்ந்த பெரியோர் செயல்கள் சிலவற்றை உள்ளத்துக் கொண்டே தாம் கூறப்புக்க உண்மைகளை யாவரும் உணரும்படி வைப்பர். இதற்கு உதாரணங்கள் சிலஉண்டு.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு" (72)

"ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்" (899)

என்ற குறள்களில் [1] முறையே ததீசி, நகுடன் வரலாறுகளைக் குறிக்கொண்டு அவர் கூறுதலைக் காணலாம். அம்முறையில் 'பேராண்மை யென்ப' என்று மேற்கூறிய குறளும் இராமபிரான் நிகழ்த்திய வரலாறொன்றை உள்ளத்துக் கொண்டதென்றே கொள்ளத்தகும். இதனை யுணர்ந்த பரிமேலழகர் "ஊராண்மை உபகாரியாந் தன்மை. அஃதாவது இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமைநோக்கி அயோத்தியரிறை மேற்செல்லாது 'இன்றுபோய் நாளைநின் தானையோடுவா' என்றாற் போல்வது" என்றெழுதிய உரைநயத்தா லறியலாம்.

பேராண்மையின் சிறந்தபகுதி இஃதென்று வள்ளுவனார் கூறிய வீரலட்சணத்தை முதல்நாட் போரில் இராமபிரானிடம் அமைத்துக்கொண்டு கம்பர் பாடும் பேரழகு அப்படலத்துச் செய்யுட்களால் நாம் அறியக்கூடும். இராமபிரானுக்குக் கருணாகரன் என்ற திருநாமம் மிகப்பிரபலமானது.

"இலங்கை யெறிந்த கருணா கரன்றன்
இசைவெஞ் சிலையின் வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ" (கலிங்-பரணி)

என்றார் சயங்கொண்டாரும். கம்பரும் இதுபற்றியே,

"கண்ணே யமிழ்தே கருணா கரனே" (பிராட்டி களங்காண்-187)

---

[1] முதலிற் குறித்த குறளில் 'அன்புடையர் என்பு முரியர் பிறர்க்கு' என்பது, ததீசிமுனிவர் தம் முதுகெலும்பினை வச்சிராயுதம் செய்ய வேண்டிய இந்திரற்கு அளித்ததையும், இரண்டாம் குறளில் இந்திரபதம்பெற்ற நகுடன் அகஸ்திய முனிவரின் சாபத்தால் அப்பதவியிழந்து சர்ப்பமானதையும் உணர்த்துவன.

"தருமமும் ஞானமுந் தவமும் வேலியா
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாக்
கருணையங் கோயிலு ளிருந்த கண்ணனை
அருனெறி எய்திச்சென் றடி வணங்கினன்" (வீடணனடைக்-50)

என்று பாடுகின்றார். இத்தகைய கருணைத்திறம் அறம் மறம் என இரு வகைப்படும். அறக்கருணை நிகழ்ச்சிகளாக இராமபிரானிடம் அமைந்தவை எத்தனையோ உண்டு. ஆனால் அப் பெருமான் மறக்கருணை காட்டிநின்ற இடம், இம் முதனாட்போரே எனலாம். அப்போரின் முடிவில் நிராயுதபாணியாகவும் விரல்களால் நிலத்தைக் கிளைத்துக் கொண்டும் விழுதுடை ஆலமரம்போல வெறுங்கைகளைத் தொங்க விட்டும் நின்ற இராவணனது தீனநிலைக்கு இரங்கி அவனை நோக்கிப் பெருமான் கூறிய வீரவார்த்தைகள் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் அவர் இறுதியாகக் கூறியதாக

"[1]ஆள யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறுங் கோசல நாடுடை வள்ளல்"

என்று கம்பர் பெருமான் பாடுகின்றார். "போரில் ஆள்வதற்குரிய கருவிகளெல்லாவற்றையும் கொண்டு நீ எதிர்த்துநின்ற இச் சமரில், அவையாவும் சண்டமாருதத்தால் அறையப்பட்ட பூளைப்பஞ்சு போலச் சிதறியதை நீ இப்போது கண்கூடாகக் கண்டனை; என் முன்பு நீ உற்றார் உறவினரையும் படைக்கலங்களையும் இழந்து தனித்து நிற்பதால், மேலும் போர்புரிந்து உன்னைக்கொல்ல இசைந்திலேன்; அதனால் இன்று போய்ப் போர்க்கு நாளை வருக" என்றருளினன் இராமபிரான் என்பது இப்பாட்டின் கருத்து.

எவ்வளவு கம்பீரமான சொற்களிலே பெருமானது மறக்கருணைத் திறம் வெளிப்படுகின்றது! எனினும் ஒரு சிறு சங்கைமட்டும் இங்கு

---

[1]யா உனக்கு ஆள அமைந்தன—எவை போரில் உனக்கு ஆளுதற்கு அமைந்த கருவிகளோ (அவையெல்லாம்) எ-று.

நிகழக் கூடியதே. மகாபாவியான இராவணனை, வாய்த்த இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அழித்து முடிக்காமல் இவ்வாறு அருளிக் கூறியது இராமனது கருணைத் திறத்தைக் காட்டுவதென்பது உண்மைதான். ஆனால் அப் பெருமானது அளவிலாற்றலைக் கண்கூடாகக் கண்ட இராவணன் "இனி நம்மால் எதிர்த்து நிற்றல் அரிது" என்று சரணாகதி பண்ணிவிடுவானாயின், அவனிளவல் வீடணற்குக் கடற்கரையிலே 'இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்று யாவரும் அறியச் செய்த பிரதிஞ்ஞை என்னாகும்? அதற்கு அவன் செய்யும் பரிகாரம் யாது? என்ற கேள்விகள் உண்டாமன்றோ? அதற்கும் விடையளிப்பவர் போல, 'கோசலநாடுடை வள்ளல்' என்ற இறுதித்தொடரைக் கம்பர் அமைத்துள்ள அழகு குறிப்பிடத் தக்கது. அவ்வாறு இராவணன் சரணம் புகுவானாயின், தான் செய்த பிரதிஞ்ஞையைக் காக்கவல்ல சத்திய சங்கற்பன் இராமபிரான் என்பதும், அவ்வரக்கன் சரண்புக்க நிலையில் தன்சொற்படி இலங்கையரசை வீடணற்கே அளித்துவிட்டு இராவணற்கு அவன் நிலை தாழாதிருக்கும்படி தன் சொந்த ஏகாதிபத்தியமான கோசல ராஜ்யத்தையே அளித்துதவக் கூடிய தானவீரன் அப்பெருமான் என்பதும், அதனால் அவனது ஆதிசங்கற்பம் ஒருபோதும் பங்கமுறக் கூடியதன்று என்பதும் பெறும்படி, குறிப்புப் பொருள் அத்தொடரில் அமைந்து திகழுதல் காணலாம். மேலும்

"நாகிளங் கமுகின், வாளை தாவுறுங் கோசல நாடுடை வள்ளல்"

என்ற விசேடணத்தால், 'அவ்வாறு தான் அளிக்கக்கூடிய நாடு, இலங்கைக்கும் குறைந்த வளமுடையதன்று' என்பதைக் குறித்ததும் காண்க. இத்தகைய பொருட்பொலிவும் சொற்செறிவும் அமையப் பாடிய கம்பர்பெருமானது அருங்கவித்திறம் அறிந்து போற்றற் குரியதன்றோ?

இவ்வாறே தசரதனது மந்திராலோசனை வசனக்களும், வசிட்டர் முடிசூட்டு விழாவுக்குமுன் இராமற்குக் கூறிய அறிவுரைகளும், பரத நம்பி கோசலாதேவிமுன் கூறிய சபதமொழிகளும் அறநெறிகளை உடன்பாட்டு முகத்தாலும் எதிர்மறை முகத்தாலும் வள்ளுவனார் கருத்தையொட்டிக் கம்பர் கூறியவையாதல் கண்டுகொள்க.

இனிக் 'கம்பரும் இளங்கோவும்' என்ற பொருளுரையை நோக்குவோம். இளங்கோவடிகள் சங்க காலத்தவர் என்பது யாவரும் அறிந்ததே. அவர் காலத்தே இராமசரிதம் பிரபலமாயிருந்த தென்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் உண்டு. இதனைச் சொற்பொழிவாளரும் நன்குவிளக்கினர். சிலப்பதிகாரத்துள்

"பெருமக னேவ லல்ல தியாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்" (13, 63-6)

"தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ" (14, 46-9)

என்பன முதலியனகாண்க. திருமாலவதாரமே இராமபிரான் என்பது இளங்கோவின் காலத்துப் பெருவழக்காம். இவர் கருத்துக்கள் கம்பர் வாக்குடன் ஒற்றுமை கொண்டுள்ள இடங்களுண்டு. அவற்றுள் சேரன் செங்குட்டுவன் வடநாட்டிற் கனகவிஜயருடன் நடத்திய போர்த்திறங் கூறுமிடங்களில்

"செங்கோற் கொற்றத் தறக்களஞ் செய்தோன்" (26, 246)

"புறத்துறை மருங்கின், அறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாட் குட்டுவன்" (கட்டுரை)

என்றிவ்வாறே பாடிச் செல்வர் இளங்கோவடிகள். இவற்றுள் 'அறக்களஞ் செய்தோன்' 'அறத்தொடு பொருந்திய மறத்துறை' என்ற தொடர்கள் குறிப்பிடத்தக்கன. மேலே கூறிப்போந்தபடி இராமபிரான் இராவணனிடம் காட்டிய மறக்கருணைச் செயலோடு [1]இவற்றையும் நாம் ஒப்பிடலாம். இதனால் செங்குட்டுவன் வடநாட்டுப்

---

[1]இளமை முதலே அருச்சுனனுடன் பகைமை பூண்டுவந்த கன்னன் பாரதப்போரில் கௌரவப்படைத் தலைமை வகித்து அவ் வருச்சுனனுடன் பொருது தோற்றுத் தளர்ச்சியுற்றபோது "அன்று போர்புரி சேனையின்பதியான வீரனை நீ, இன்று போய் இனி நாளை வாவென இனிதியம்பினனால்." என்று பார்த்தன் மறக்கருணையை அவனிடம் காட்டினன் என்றும், அதனால் இராமபிரானை ஒத்தவனுயினன் என்றும் வில்லிபுத்தூரர் 16-ம் போர்ச் சருக்கத்துப் பாடுதல் இங்கு ஒப்பிடத்தக்கது.

பேரில் தறுகண்மைச் செயல் புரிந்தவன் ஆயினும், அவற்றிடையே பகைவரிடம் தளர்ச்சிகண்ட போதெல்லாம் தன் கருணைத் திறன் களைக் காட்டியிருந்தவன் என்பது புலப்படும். இயல்பாகவே அன்பு முதிர்ந்து புரியும் இவ்வருஞ்செயலையே

"அறத்திற்கே யன்புசார் பென்ப ரறியார்
மறத்திற்கு மஃதே துணை"

என அன்புடைமை யதிகாரத்துக் கூறுவாராயினர் வள்ளுவனாரும். அறச்செயல்கட்குமட்டும் அன்பு சார்பு ஆகும் என்று கூறுவர் அறி யாதார்; வீரமாகிய மறச் செயல்கட்கும் அந்த அன்பு சார்பாகி அதற் குத் துணைபுரிவதாம் என்பது கருத்து. எனவே தறுகண்மை காட் டும் பெரு வீரச்செயல்களும் அன்பைத் துணைக்கொண்டே நிகழ வேண்டுமென்பதாயிற்று. அன்பின் முதிர்ச்சியே அருளாகிய கருணை யாதலால், இக்குறளில் அன்பென்றது கருணையையும் உள்ளடக்கிய தாகும். இங்கு மறம்என வருவது செற்றம் அல்லது பாவமன்று; வீரத்தையே குறிப்ப தென்க.[1]

இத்தகைய அறச்செயல்களை, அறநிலை மறநிலை என இருவகைப் படுத்தவர் முன்னோர்[2]. எனவே அவ்வறங்களுட் சிறந்த அன் புடைமை கற்புடைமை போன்றவைகளும் அறக்கருணை மறக் கருணை: அறக்கற்பு மறக்கற்பு எனப் பகுக்கப்படுவன[3]. இவ்வாறு முன்னோர் கூறிய மறநிலையன்பைத் தம் உள்ளத்துக்கொண்டு, இளங் கோவடிகளும் கம்பரும் தத்தம் பெருநூல்களிலே தக்க இடங்களில் அமைத்துப் பாடுதல் ஒப்பிடற்குரியது.

---

[1] இவ்வாறு கூறுவர் பரிமேலழகர்; இக்கருத்து ஆராய்ச்சிக்குரியதேயாம்.

[2] அறச்செயல் போலவே, பொருளையும் இன்பத்தையும், அறநிலை மறநிலை களாகப் பகுத்து அவற்றின் இலக்கணங்களைக் கூறுவர் திவாகரர் முதலிய நிகண்டு நூலோர். இவற்றின் விரிவை 'வில்லிபுத்தூரர்' என்ற தலைப்பில் பாரத வீரர் செயல்களோடு பொருத்தி யானெழுதிய கட்டுரையுட் காண்க. (இலக்கியக் கட்டுரைகள், பக். 110-118.)

[3] "தழிஞ்சி" என்ற புறத்துறை இத்தகைய தென்பர்.

இனிச் செங்குட்டுவன் வடநாட்டிற் பெற்ற போர்வெற்றியைப் புகழுமிடத்தே

"செயிர்த் தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட தொன்பதிற் றிரட்டியென்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி எண்கொள" (27-7-10)

என்று பாடுதல் காணலாம். செங்குட்டுவன் வடநாட்டுப் போரில் அடைந்த வெற்றித்திறம், கூற்றுவன் உயிர்த்தொகையை ஒருசேர உண்ட யாண்டும் மாதமும் நாளும் நாழிகையும் பதினெட்டு என்று முன்னைப் போர்களோடு கூட்டி எண்ணும்படி இருந்தது என்பது இதன்பொழிப்பு. அஃதாவது தேவாசுரயுத்தம் 18 ஆண்டிலும், ராம ராவண யுத்தம் 18 மாதங்களிலும், மகா பாரதப்போர் 18 நாளிலும் நடந்தேறியவாறே, கனகவிசயருடன் செங்குட்டுவன் நடத்திய போர் 18 நாழிகையில் முடிந்தது என்று, நாழிகையையும் பதினெட்டு என்ற கணக்கில் வைத்துக் கூட்டி, உலகம் மதித்தது என்பது கருத்து.[1] இவற்றுள் இராமாயணப்போர் 18 மாதங்களில் நடந்தேறியது என்பது புதியதோர் செய்தியாம். இதற்கு வான்மீகத்திலோ கம்பர் வாக்கிலோ ஆதாரம் காணப்படவில்லை. ஆயினும், இவ்வழக்குத் தமிழகத்தில் வழங்கியதொரு பழையசெய்தி யென்றே சொல்லலாம். சீதாதேவிக்குத் தீங்கிழைக்க வந்த சூர்ப்பநகை இலக்குமணனால் அங்கபங்க முற்றதனை

"கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினைக் கொடியாள்
மூலைது மித்துயர் மூக்கனை நீக்கிய முறைமை
மலைது மித்தென இராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததீதார் தன்மை"

(சூர்ப்ப-96)

---

[1] திருத்தக்கதேவர் 'எண்கொண்டஞாட்பு' (2359) எனச் சிந்தாமணியிலும், செயங்கொண்டார் "தேவாசுர ராமாயண மாபாரத முளவென், றோவாவுரை ஒயும்படி யுளதப்பொரு களமே" (களம்பாடல்-1) எனக் கலிங்கத்துப்பரணியிலும், தங் காப்பியத்தலைவர்கள் இத்தகைய வெற்றிகளைப் போரிற் பெற்றவர்களாகப் பாடுதல் ஒப்பிடத்தகும்.

என்று பாடுகின்றார் கம்பநாடர். இவ்வாறு அங்கச்சேதம் புரிந்த நாளை இராவணவதத்துக்கு அடிப்படையாகக்கொண்டு 18 மாத அளவினதாக முன்னோர்கணக்கிட்டனரோஎனக் கொள்ளக்கிடக்கின்றது.

இனிக் 'கம்பரும் திருத்தக்கதேவரும்' என்ற பொருளுரைக்குச் செல்வோம். பெருந்தமிழறிஞராயிருந்தவரும் பின் வாழ்நாளில் முற்றத் துறந்து பெருஞானியாயிருந்தவருமான ஒருவர் உலக இன்பங்களை வெறுத்த நிலையில்

"திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேம் குறளனுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு" (சிந்தாமணி-முகவுரை)

என்று பாடியதாக வெண்பா வொன்று வழங்குகின்றது. இதன் கருத்தைச் சொற்பொழிவாளரும் விரித் துரைத்தனர். பூர்வாச்சிரமத்தில் தாம் விரும்பிக் கற்றுச் சுவைத்த பெருநூல்களிலே சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், கொங்குவேண்மாக்கதை, திருக்குறள் என்ற நான்குமே சிறந்தவை என்றும், தம் துறவுநிலையில், அவையும் இனித் தமக்குவேண்டாதனவே யாமென்றும், அதனால் 'எங்கெழிலென் ஞாயிறெமக்கு' என்று வாளாவிருந்து மனமடங்கியதாகவும் தம் ஞானதசையில் அப் பெரியார் கூறியிருத்தல் காணலாம்[1]. இதிலிருந்து தாம் அறிந்து சுவைத்த நூல்களுள், பண்டைத் தமிழ்க் காப்பியமான சிந்தாமணி தலைசிறந்த தென்பதும் அதற்கு அடுத்த நூல் கம்பராமாவதாரமே என்பதும் உணரக்கிடக்கின்றன.

---

[1] 'எங்கெழி லென் ஞாயி றெமக்கு' என்பது ஞானியர் கூற்றாக வழங்கும் ஒரு தொடர். "இங்கிப்பிறவியெமக்கெங்கோ னல்குதியேல், எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்" (19) என்றார் வாதவூரடிகளும். "கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்" (திருவாசகம்) எனத் தம் பரஞானதசையில் அப்பெரியார் கூறுமாறு அமைந்ததே மேற்கூறிய வெண்பா என்க.

இராமகாதை யென்னுது 'கம்பர் விருத்தக் கவித்திறம்' என்றத ...னைக் காப்பிய விருத்தங்களினும் மேம்பட்ட சிறப்புடையன கம்பர் விருத்தங்கள் என்பது குறிக்கப்பட்டதாயிற்று. சிந்தாமணியும் இராமாவதாரமும் தமிழ்ப் பெருங்காப்பியங்களுள் மேம்பட்டவை என்பதில் ஐயமில்லை. அவற்றுள், காப்பியப்போக்கில் கம்பருக்குச் சிறந்த வழிகாட்டியாக நின்ற நூல் சீவகசிந்தாமணியே எனலாம். இதற்கு ஒரு சில உதாரணங்கள் வருமாறு:—சீவகனது வளர்ப்புத் தாய் தந்தையர்களான சுநந்தை கந்துக்கடன் இருவர்களின் காதலொற்றுமைகளை—

"கற்பகங் கந்துக் கடனொத்தான்
இணைவே லுண்க ணங்கையு மின்பக்கோடி யொத்தாள்" (365)

என்றும், சீவகனோடு கலந்து மகிழ்ந்த இலக்கணையை

"காமவல்லி, பெருநிறங் கவினி யார்ந்த
கற்பகம் பிணைந்த தேபோல்" (2517)

என்றும் திருத்தக்க தேவர் சிறப்பிக்கின்றார். காமவல்லி என்பது கற்பகதருவிற் படரும் ஒரு தெய்வக்கொடியாம். இன்பக்கொடி யென்பது அதன் தமிழ்ப்பெயர்ப்பு; காமவல்லியானது கற்பக தருவைத் தழுவியது போலக் காதலரிருவரும் கலந்துநின்றார்கள் என்பது மேற்கூறிய அடிகளின் கருத்து. இச் சிந்தாமணிக் கருத்தைக் கம்பர் கையாளுமுறையை இனி நோக்குவோம். சூர்ப்பனகை ஓர் அழகிய பெண்ணுருக்கொண்டுவந்து வனத்திடை இராமசந்நிதியை அடைந்தபோது—

"நீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையோர் புண்ணியம தன்றே
எதுபதி எதுபெயர் யாவருறவு" [என்றான்
வேதமுதல், பேதையவள் தன்னிலை விரிப்பாள்] (38)

என்று அப்பெருமான் உசாவினர். அதற்கு அவ்வரக்கி

---

[1] விருத்தக்கவித்திறம் என்பதிலுள்ள திறம் என்பதற்கு வரலாறு, கதை என்ற பொருள் கூறினும் அமையும்; 'ஆபுத்திரன் திறம்' (மணி, 12, 27) முதலிய இடங் காண்க.

"பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்விமுப் புரங்கள் ...
சேவலோன் துணைவ னான செங்கையோன் தங்கை திக்கி...
மாவெலாந் தொலைத்து வெள்ளி மலையெடுத் துலக மூன்றுங்
காவலான் பின்னை காம வல்லியாங் கன்னி யென்றாள்" (39)

என்று விடை பகர்ந்தனள் என்பர் கம்பர். புருஷ மோகினியான இராமனைக் கண்டதுமே காதல் பெருகி அவனை எப்படியும் தான் மணம்புரிய வேண்டுமென்று முடிவுகட்டியவள், சூர்ப்பனகை. அதனால் தனித்தநிலையில் தன்கருத்தை வெளியிடத் துணிந்த அவள், மங்கலச் சொல்லால் 'பூ' என்று திருமணம் பேசத் தொடங்கலானாள். பின், 'யாவருறவு' என்ற பெருமான் கேள்விக்கு விடையாகத் தான் பிரமதேவனது பேரனின் திருமகளென்றும், நிதியின் கிழவனான குபேரனுக்குத் தங்கை முறையின ளென்றும், திரிலோகாதிபனான இராவணேசுவரனுக்கு இளையசகோதரி என்றும்-குலம் செல்வம் ஆற்றல்களால் தன் இணையற்ற நிலைகளை அவள் கூறிக்கொண்டனள். இராவண சகோதரி என்றதனாலே, தன்பதி இலங்கைமாநகர் என்பது பெறப்படுமாதலால், அதனைக் குறிப்பிற் பெற வைத்தாள் என்க. இனி, 'ஏது பெயர்' என்றதற்கு விடையாகக் 'காமவல்லி' என்றனள் அவ்வரக்கி. இது புதியதாக அப்போது அவள் புனைந்துகொண்டதோர் அழகிய பெயர். காமவல்லியானல் அது படர்தற்குரிய கொள்கொம்பும் முன்னமே அமைந்தது போலும் என்று கருதிவிடாதபடி 'காமவல்லியாங்கன்னி' என்று ஞாபகமாகக்கூறுவாளாயினள் அவள். இதனால் காமவல்லியுங் கன்னியுமான தான், படர்ந்து வாழ்தற்கேற்றதோர் 'கற்பகதருவை நாடிவந்தேன்' என்றும், அதனால் 'தீதற்ற நல்வரவே' தன்வரவு என்றும் குறிப்பிற் பெற வைத்தாளாயிற்று. இவ்வாறு திருத்தக்க தேவராண்ட உவமையைத் தக்க சந்தர்ப்ப மொன்றில் அருமையும் பெருமையும் பட அமைத்த கம்பர் பெருமானது கவித்திறம் வியக்கத் தக்கதன்றோ?

இனி, கம்பர் தம்எழுதுகோலைச் சிந்தாமணியாகிய பொன் மையில் தோய்த்துத் தம் காப்பியச் சித்திரம் வரைந்தவர் என்பதற்குப் பல

...ங்கள் தரக்கூடும். அவற்றுட் சில கூறுவேன். சகோதரர் ...ன கரதூடணர்களுள், தூடணன் இராமபாணத்தால் போரி டையே தலையறுப்புண்டதைக் கேள்வியுற்ற கரனது நிலைமை—

"தம்பிதலை யற்றபடி யுந்தய ரதன்சேய்
அம்புபடை யைத்துணி படுத்தது மறிந்தான்
வெம்புதிறல் விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டியல் குலக்கரியொ டொப்பான்"

(கரதூடணர் வதை-182)

என்று பாடுகின்றார் நம் கவியரசர். இப்பாட்டின் ஈற்றடியுள் 'கொம்பு தலை கட்டிய குலக்கரி' என்று அச்சுப்பிரதிகளில் உள்ளது. இதற்குத் 'தந்தங்களை முகத்தின்கண்ணே உறுதியாகக் கொண்ட குலயானை போன்றவன்' என்று பொருள் கூறுவர். இப் பாடமும் பொருளும் நேர்மையும் நயமும் உடையனவாகா. இஃது எவ்வாறாயினும் திருத் தக்க தேவர் வாக்கினின்று கம்பர் கருதியமைத்த பாடமும் பொரு ளும் இன்னவென்று நாம் தெளியத் தடையில்லை; சீவகனைக் கட்டி யங்காரன் சிறைப்படுத்திய தறிந்தபோது, மனங்கொதித்து நின்ற அவன் தோழர்களின் நிலைமையை—

"தருக்குடை வேழம் வாளார் ஞாட்பினுட் டகைமை சான்ற
மருப்புட னிழந்த தொத்தார் மன்னுயிர்த் தோழன் மாரே"

(சீவக. 1135)

என்று பாடுகின்றார் சிந்தாமணி யாசிரியர். இதனால் தன் கொம்பு களைப் போரில் இழந்த குலயானையைத் தோழரின் சினத்துக்கு அவர் உவமை கூறியிருத்தல் தெரியலாம். இக் கருத்தமைதி பெறவே, கம்பரும் தம்பியை இழந்த கரனது கடுஞ்சினத்துக்கு உவமிக்க லாயி னர் என்பதில் ஐயமில்லை. எனவே 'கொம்பு தலை கட்டியல்' என்ப தற்குக் கொம்பு தலையினின்று பறிக்கப்பட்டு, இகலும் (=பகைக்கும்)[1]

---

[1] இயலுதல் (=இகலுதல்)-மாறுபடுதல்; பகைத்தல், 'இயலுமாலொடு நான்முகன்' (தேவா-திருவன்னியூர்-8. அப்பர்.) எனக் காண்க. இனி; இயல்-செயல்படும், இயங்கும் எனப் பொருள் கூறினும் ஆம்.

என்பதே பொருளாம் என்க[1]. கொம்பு பறியுண்ட மத சிற்றமிக்கு எதிர்க்கக் கூடிய தென்பர். ஆகவே திருத்தக்க கருத்தைத் தழுவியே நயம்பெறப் பாடலாயினர் நம் கவிஞர்பெருமான் என்பது தெரியலாம்.

கம்பநாடர் தம் இராமாவதாரத்தை அரங்கேற்றும்போது, சிந்தாமணியிலிருந்து ஓர் அகப்பை முகந்துகொண்டதாகக் கூறினர் என்று ஒரு வழக்குண்டு. அதற்கேற்ப, அக் காப்பியத்தோடு ஒத்த சொல்லும் பொருளுமுடைய பகுதிகள் பலவுள. கட்டியங்காரனால் சீவகன் பிணிப்புண்ட செய்திகேட்டு, பதுமுகன் முதலானோர்—

> "நட்டவற் குற்றகேட்டே பதுமுகன் நக்கு மற்றோர்
> துட்டியைத் தின்ன லாமோ கோட்புலி புறத்ததாகக்
> கட்டியங் காரனென்னுங் கழுதைநம் புலியைப் பாய
> ஒட்டியஃ துணரலாமே உரைவல்லை யறிக வென்றான்" (1134)

என்று சினந்து கூறியதாகத் திருத்தக்கதேவர் பாடுகின்றார். இக் கருத்தைத் தழுவியே கம்பர், இலக்குமணனால் சூர்ப்பநகை அங்கபங்க முற்றபோது—

> "புலிதானே புறத்ததாக் குட்டிகோட் படாதென்ன
> ஒலியாழி யுலகுரைக்கு முரை பொய்யோ" (102)

---

[1] 'கொம்பு தலை கட்டிய' என்ற அச்சுப்பிரதிப் பாடத்துள், கட்டிய என்பதற்குப் பறிக்கப்பட்ட, பிடுங்கப்பட்ட என்று பொருள் கொள்ளல் இலக்கண முறைக்கு அமைந்ததன்று. கள்-தல்; தள்-தல் (பிடுங்குதல்; தடுத்தல்) என்ற வினைமுதல்களின் அடியாக வரும் பெயரெச்சங்கள் கட்ட, தட்ட என்றே வரற்பாலன. 'தரங்க வேலை தட்ட விச்சேது' (மீட்சிப்-169) என்றார் கம்பரும். கட்டிய என்பது கட்டு (பிணை) என்ற பகுதியடியாகத் தோன்றுவது. அதனால் 'கட்டியல்' என ஈற்றெழுத் தொன்றைப் பெய்து வினையெச்சமாக்கிப் பாடங்கொள்வதே கம்பர் வர்க்குக்கு அமைவுடையதாகும். கட்டு இயல்-பிடுக்கப்பட்டு இகலும்; 'கடையு வாவினில் இராவணன் றன்னையுங் கட்டு' என்ற கம்பர் வாக்கும் காண்க.

...அவள் புலம்பியதாகப் பாடுதல் காணலாம். அண்ணன் ...வணேசுவரன் ஆற்றல் மிக்கு உலகாளுங் காலத்தே தானடைந்த பரிபவங்களைக் கூறிப் புலம்புங்கால், இக் கருத்துக் கூறப்பட்டுளது. 'புலி தன் குட்டியை வேறென்று தின்னப் பார்த்திராது' என்ற மேற்கூறிய சிந்தாமணிக் கருத்து, சீவகன் வரலாற்றுக்கும் இடத்துக்கும் அத்துணையாகச் சிறந்ததென்று சொல்லக் கூடவில்லை.[1] ஆனால், 'புறத்தே தாய்ப்புலி யிருக்க அதன் குட்டி பிறரொருவராற் பிடிபடாது' என்பது வரலாற்றுக்கு இயைந்த முதுமொழியாதல் உணரலாம். இவ்வாறே ஆற்றுவருணனையாகத் திருத்தக்கதேவர்

"வெள்ளிவெண், கோனிரைத்தன போற்கொழுந் தாரைகள்" (34)

என்று பாடிய சொல்லும் பொருளும்

"வான், வெள்ளிவீழிடை வீழ்த்தெனத் தாரைகள்" (ஆற்று-4)

என்றும், பாலைநில வருணனையுள்—

"வழிகொண்டதோர் வெவ்வழல் வாய்சொலின் வேம்" (1186)

என்ற சிந்தாமணித் தொடரின் போக்கில், கம்பர் தாடகைப் படலத்தே—

"வெம்மையைப் பகரினும் பகருநா முடிய வேம்" (6)

என அப்பாலையின் கொடுமையையும் பாடிப்போதல் காணலாம். மேலும், விசயை தன் கருப்பத்தில் சீவகனைக் கொண்டுள்ளதை அறிந்த கோவிந்தன் என்பான்—

"ஆலம்வித் தனைய தெண்ணி" (4/6)

என்றது, வாமனவதாரத்தை

"ஆலமர் வித்தின் அருங்குற ளானான்"

என்ற கம்பர் வாக்கோடு இயைந்திருத்தலும் காண்க.

---

[1] 'குட்டியைத் தீண்டலாமோ கோட்புலி புறத்ததாக' என்பது கம்பர் காலத்திருந்த சிந்தாமணிப் பாடம் போலும். இவ்வாறுயின் 'தீண்டலாமோ' என்பது தின்றலாமோ தின்னலாமோ, என்று நச்சினார்க்கினியர் காலத்தே பாடம் மாறிவழங்கியதாதல் வேண்டும்.

இனிக் 'கம்பரும் சேக்கிழாரும்' என்ற கடைசிப் பொரு குச் செல்வோம். மேலே வள்ளுவர், இளங்கோ, திருத்தக்க தே என்ற முன்னோர் மூவர்களோடு கம்பர்க்குள்ள கருத்தொற்றுமைகளை ஆராய்ந்து கூற அறிஞர்கள் நியமிக்கப் பெற்றவாறே, சேக்கிழாரை நான்காமவராகக் கூற நியமித்திருப்பது நோக்கத் தக்கது. இதனால் சேக்கிழார் கம்பர்க்கு முன்பு விளங்கியவர் என்ற கொள்கை இக் கழகத்தார்க்கு உண்டென்பது புலப்படும். இம் முடிவினை 18 ஆண்டுகட்கு முன்பே நானும் கொண்டு, என் நூலுள் எழுதியுள்ளேன். அஃதாவது:- கி. பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சோணாடு ஆண்டவன், மூன்றாங் குலோத்துங்கசோழன் என்பான்; அவனுக்கு முன்புஆட்சிபுரிந்த அவன் முன்னோர்களிலே, 'தியாகசமுத்திரம் என்று விக்கிரமசோழனும், தியாகாபரணன் என்று அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கனும் தியாகமேகம் என்று அவன் மகன் இரண்டாம் இராசராசனும் சிறப்புப் பெயர்கள் பெற்றிருந்தனர்; இவர்கள் போலவே, தியாகவிநோதன் என்ற பெயரை இம் மூன்றாங் குலோத்துங்கன் பெற்று வாழ்ந்தவன்—என்பதாம். இச் செய்தி, சாசன ஆதாரங்களால் அறியப்படுதல் அக்காலத்தே என்னால் விளக்கப்பட்டுள்ளது.[1] கம்பநாடர் தம் காலத்துச் சோழனை—

"சென்னிநாட் டெரியல் வீரன் தியாகவி நோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பை உளக்கொள நோக்கிப் போனார்"

(மருத்துமலை-58)

என்று இதுவே சிறப்புப்பெயரால் ஆளுதல் காணலாம். இப்பாட்டுள் 'வீரன்' என்றதும் அக் குலோத்துங்கற் குரிய 'திரிபுவன வீரன்' என்ற பெயரின் சுருக்கமே யாம். இச் சோழனுக்கு ஒரு தலைமுறை முன்பாண்ட சோழவேந்தர் இரண்டாம் இராசராசனும் அவன் தந்தை இரண்டாம் குலோத்துங்கனுமாவர். இவ்விருவர் ஆட்சியிலும் சேக்கிழார் வாழ்ந்தசெய்தி யான் எழுதிய சாசனத் தமிழ்க்கவி சரிதம் என்ற நூலால்[2] அறிஞர் நன்கறிந்ததே.

---

[1] சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக்-83.

[2] ஷை ஷை பக்-74-76.

...வாறு கம்பர்க்குச் சிறிது முற்படச் சேக்கிழார் விளங்கியவர் ...தற்கேற்ப, அச் சேக்கிழாரின் வாக்கோடு ஒப்புடைய கருத்துக் ...ளும் சொற்றொடர்களும் கம்பராமாயணத்திற் பயிலுதல் காணலாம். அவற்றுட் சிலவற்றை இனி விளக்குவேன்.

சேக்கிழாரது பெரியபுராணம், நாயன்மார்கள் அறுபத்துமூவரின் சரித்திரத் தொகுப்பான நூலே. அதனால், பெருங்காப்பிய முறைக் கேற்பத் தன்னிகரில்லாத் தலைவனொருவனைப்பற்றி ஒருகோவையாய்ப் பல்சுவைபெறப் பாடப்பட்டதன்று. பெரும்பான்மையும் பக்திச் சுவையே பெருகப்படைத்தது அது. அதனைக் காப்பியப்போக்கில் இராமாவதார நூலோடு ஒற்றுமைப்படுத்தி ஆராய்தவற்கு அதிக இடமில்லை. இவற்றைச் சொற்பொழிவாளரும் நன்கு விளக்கினர்.

ஆயினும் கம்பர் வாக்கோடு அங்கங்கே இயைந்த கருத்தொற்றுமைகளை நாம் அதனில் காணக்கூடும். உதாரணமாக ஒரு சில வருமாறு:—

பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட சருக்கத்துள், சுந்தரமூர்த்திகள் புத்தூரிலே திருமணக்கோலமாகப் பவனிவரும்போது, கண்டு களித்த பெண்டிர்களின் கூற்றில்—

“கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு மகிழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள்” (௮5)

என்று கூறுவர் சேக்கிழார். இதுவே சந்தத்தில், இராமாவதாரம் கார்முகப்படலத்தில்—

“நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குறிசிற்கு மன்ன தேயாம்
தம்பியைக் காண்மின் என்பார் தவமுடைத் துலகம் என்பார்
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை யிறைஞ்சும் என்பார்” (44)

எனவரும் கம்பர் பாடல் இங்கே ஒப்பிடத்தகும். இவற்றுட், செய்யுட் போக்கின் வளமும் நயமும் கம்பர் வாக்கில் அதிகம் என்றே தோன்றக் கூடியன. முன்னோரைத் தழுவிப் பாடுமிடங்களில், அம் முன்னோர் வாக்கினும் வளம் முதலியன பெருக அமைத்துப் பாடும் இயல்பினைப் பின்னோர் நூல்களில் பெரிதும் காணலாம். இதற்குச்

சான்ருக மற்ருேர் இடமும் உண்டு. பரவையாரைக் க...
மிக்க சுந்தரமூர்த்திகள் மாலைக்காலத்தே தனியாக நின்று தளர...
நிலையை—

“வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையு மாயினர்” (தடுத்தாட்-163)

என்று சிறப்பிப்பர் சேக்கிழார். இக்காதல் நிலையே சீதாதேவியிடம் இராமபிரானுக்கு நிகழலாயிற்று என்பதைக் கம்பர் அதுவே விருத்த வகையில்—

“முனியுந் தம்பியும் போய்முறை யாற்றமக்
கினிய பள்ளிக ளெய்தினர், பின்னிருட்
கனியும் போல்பவன் கங்குலுந் திங்களுந்
தனியுந் தானுமத் தையலு மாயினன்” (மிதிலைக். 139)

என்று பாடுதல் காணலாம். “பரவைதந்த படர்பெருங் காதலும், ஆவிசூழ்ந்த தனிமையு மாயினர்” எனக் காதலுந் தனிமையுமாகிய இரண்டே சுந்தரர்க்கு மாலைத்துணையாயின என்ற சேக்கிழாரின் கருத்தைத் தழுவியே, இராமனுக்கு இரவுத் துணையாயிருந்தவை கங்குல், திங்கள், தனி, தான், தையல் என ஐந்தாக விரித்து அழகு படுத்தினர் கம்பர் என்பது கூறவும் வேண்டுமோ? இவ்வாறு விரிப்பது பின்னோர்க்கே பெரும்பாலும் இயல்பு என்னத் தடையில்லை.

இனி, சுந்தரமூர்த்திகள் புத்தூரில் திருமணச்சடங்கு நிகழ்தற்கு முன் நடத்திய நித்த நியமங்களையும், கொண்ட கோலங்களையும், அவ்வாறே சம்பந்தமூர்த்திகள் நல்லூர்ப்பெருமண நிகழ்ச்சிக்கு முன் நடத்திய நித்தியக் கடன்களையும் கோலங்களையும் கூறும் இடங்களில், திருமஞ்சனமாடுதல், திருநீறிடுதல், கலவை சாத்துதல், மாலை அணிகலன்களணிதல் முதலியவை முன்பின்னுகக் கூறப்படுதலைச் சேக்கிழார் வாக்கிற் காணலாம். அம் முறையில் இராமபிரான் திருமண நிகழ்ச்சிக்கு முன்—

“மங்கல மஞ்சன மாடி னடியே” (கடிமண. (48)
“ஆதியஞ் சோதியை அடிவ ணங்கியே”[1] (49)

---

[1] இராமபிரான் தம் அவதார காலத்தே வழிபட்ட குலதெய்வம் திருமாலே என்ற வால்மீகி போலவே, கம்பருங் கூறினர். அதனுல் திருமாலின் சின்னமான திருநாமம் தரித்தனர் என்க.

தன்றிரு நாமத்தைச் சாலுஞ் சாத்தியே[1]" (67)
"தழுவிய நிலவெழக் கலவை சாத்தியே" (50)

வாறு, இராமன் நித்தநியமங்களையும் கொண்ட கோலங்களை ம்பரும் பாடுகின்றார். இவற்றிலெல்லாம் தத்தம் வைதிக சமய ட்கேற்ப, மஞ்சனமாடியபின் நெற்றிக்குறி தரிப்பது தவறாமல் டுகின்றது. சூனிய நெற்றியோடு திருமண முதலிய மங்கலச் கு தொடங்குதல் கம்பர்கால நிலைக்குச் சிறிதும் உற்றதன்று. திருமண்காப்பு அல்லது திருநாமம் தரித்தல் அவர் காலத்தில் மிகப் பிரபலமாய் இருந்ததுமாம். இலங்கையில் யுத்த சந்நத்தனாயிருந்த சம்புமாலியுடன் போர்புரியத் தொடங்குமுன்பு அநுமான் தனித்து நின்றவராயினும், ஒருவகையில் அவரும் போருக்கு ஆயத்தமா யிருந்தா ரென்பதை உருவக மூலம்

"அய்யனும் அமைந்து நின்றான் ஆழியா னழிவில் நாமம்[2]
செய்சுடர் விளக்கிற் றோன்றும் நெற்றியே நெற்றி யாக
மொய்ம் மயிர்ச் சேனை பொங்க முரணயி லுகிர்வாள் மொய்த்த
கைகளே கைகளாகக் கடைக்குழை திருவா லாக"

என்று சிறப்பிக்கின்றார் நம் கவியரசர். (கிட்கிந்தா-சம்புமாலி வதை)

"ஒளிமிக்க விளக்குப்போலத் திருநாமம் தரித்துக்கொண்ட தம் நெற்றியே நெற்றிப்படை (முன்படை) யாகவும், தம் மேனிமுழுதஞ் சிலிர்த்து நின்ற மயிர்த்தொகுதிகளே சேனை (நடுப்படை) யாகவும், கூரிய உகிர்கள்மிக்க கைகளே கைகள் (பக்கவாட்டுப் படைகள்) ஆக வும், தம் திருவாலே[3] கடைக் கூழை (பின்னணிப் படை) யாகவும்

---

[1] திருமாலின் துவாதச நாமங்களைக் கூறிக்கொண்டே 12 இடங்களில் திருமண் இட்டுக்கொள்வது மரபாதலின், திருநாமம் எனப்பட்டது. "ஈராறு நாம முரைசெய்து மண்கொ டிடுவார்கள் காணு மிமையோர்" என்றார் வில்லிபுத்தூராரும். (பாரதம்)

[2] 'அளவில்' என்பது 'அழிவில்' என்று திருத்தங் கொள்ளத்தக்கது.

[3] "துசியொடு நெற்றியிரு கையினெடு பேரணி கடைக்குழை தொகுத்து" என்றார் கம்பரும். இவை படைவகுப்பின் பேதங்கள். (மூலபல-141)

கொண்டு மாருதியும் போருக்குச் சன்னத்தரா யிருந்தா இப்பாடற் கருத்து. இதனால் அடியாரான அனுமார்க் வைணவ சின்னங்களே ஆண்டானான இராமபிரானுக்கும் கூறலாயினர் கம்பர் என்பதில் ஐயம் என்னை? முதனாட் இராமன் ஆயத்தமான நிலைமையை

"தளவியல்[1] தும்பையஞ் சுழியஞ் சூடினான்" (115)

என்று கம்பர் கூறியவாறே, மாருதியை

"அரும்பியல் தளவப் பைந்தார் அனுமன்" (மாயாசனக-58)

என்று பிராட்டி கூற்றில் வைத்து அவர் பாடுதலும் காணலாம். மேலும், இராமபிரான் கோமதியாற்றங்கரையில் அசுவமேத யாகந் தொடங்குதற்குமுன், தம் செய்கடன்களை முடித்தபின் அலங்கரித்துக்கொண்டதை உத்தரகாண்ட ஆசிரியர்[2]

"திருமணி மார்பன் தன்திரு நெற்றி திகழ்திரு நாமமுஞ் சாத்தி"
(அசுவமேத-70)

என்று பாடுதல் இங்கே அறியத் தகும். [3]இவ்வாறு முன்னோரெல்லாம் கூறியிருப்பவும் திருமண்காப்புத் தரித்த பாடல் சிலபிரதிகளிற் காணப்படவில்லை என்றும், பிற்காலத்து வைணவர்களால் அஃது இடைச் செருகப்பட்டதே என்றும், சிலர் எழுதிவருவது என்னோ! அங்ஙனம் சிலசுவடிகளிற் காணப்படவில்லை எனின், அதற்குக் காரணம், இல்லாத தொன்றை இடைச் செருகினர் வைணவர் என்பதினும், உள்ளதொன்றை எடுத்துவிட்டனர் ஏனையர் என்று கொள்வதே இவ்விடத்துக்கு ஏற்றதாகும்.

---

[1] தளவு-குலத்துக்குரிய அடையாளமாலை யென்றும், தும்பை-போர் மாலை யென்றுங் கொள்க.

[2] உத்தரகாண்ட ஆசிரியர் 'வாணிதாதன்' என்ற பெயரினர் என்று சோழ மண்டல சதக நூலார் கூறுவர். "உத்தரகாண்டம் வாணிதாதனரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே" என்பது அவர் வாக்கு. வாணிதாதன் என்பார் கூத்தரல்லர் என்றும், கம்பர் சமகாலத்தவராய் அவருடன் பகைமை பூண்ட வாணியன் தாதன் என்ற புலவரென்றுங் கொள்க.

[3] மேற்கூறிய கம்பர் வாக்குக்களும் சுவடிகளில் இல்லை என்று பிறர்சொல்லவும் கூடும் போலும்!

...சேக்கிழார் வாக்கிற்கா னும் மற்றொரு செய்தி கம்பராற் ...பெற்றளது. அஃதாவது அவரது நூலில் கழறிற்றறிவார் ...நீத, சேரமான் பெருமாளுடன் கூடிச் சுந்தரமூர்த்திகள் ...ய விளையாடல்களுள்—

...ச்செண்டும் பரிச்செண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
...க்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி மகிழ்வுற்றார்" (126)

மற்றோரிடத்தில்—

...செண்டாடுந் தொழின்மகிழ்வுஞ் சிறுசோற்றுப் பெருஞ்சிறப்பும்
கண்டாரா விருப்பெய்த" (155)

என்றும் பாடுகின்றார் சேக்கிழார். கம்பநாடரும் பரிச் செண்டாடும் இவ் வழக்கினை

"வாலுளைப் புரவியிற் பொருவில் செண்டாடி" (நகரப் 68)

என்று கூறுதல் காணலாம். இக் கவியரசர் காலத்தவனான மூன்றாங் குலோத்துங்க சோழனும்

"ஓடை மதகளிறேறி ஆடல்வாம் பரிநடவித்
தண்டலைவ மலர்மாலையில் வண்டாடச் செண்டாடி மகிழ்ந்தான்"

என்று அவனது மெய்க்கீர்த்தி புகழ்தலும் அறியத்தக்கது. இத னால் அவ் விளையாட்டுக் கம்பர் முதலியோர் காலத்துப் பெருவழக்கா யிருந்த செய்தி தெரியலாம்.

மேற்கூறியவற்றுள், 'நிலைச்செண்டு' என்பது தரையில் இருந்த படியே செண்டுவீசி விளையாடுதல் என்றும், பரிச்செண்டு என்பது, குதிரையின் மேலிருந்து அதன் ஓட்டநிலையிலே அதனை வீசி ஆடுதல் என்றும் கூறுவர். செண்டு என்பது பந்து போன்ற ஒரு வகை விளையாட்டுக் கருவி ஆகவேண்டும். "இந்தியன் ஆண்டிகோரி" என்ற ஆங்கில பத்திரிகையில் பரிச் செண்டாடுதல் பற்றிக் காணப் படும் குறிப்பொன்று பின் வருமாறு:—[1]

இராஷ்டிரகூட வேந்தனான நான்காம்இந்திரன்[2] என்பான், குதிரை மேலிருந்து பந்துவிளையாட்டுப்புரிவதில் ஒப்புயர்வற்றவனாயிருந்தான்

---

[1] Indian Antiquary, 1934, p. 48.

[2] இவன் கி. பி. 982-ல் இறந்தவன் என்றும், இராஷ்டிரகூட வேந்தரில் இவனே இறுதியானவனென்றும் கூறுவர்.

என்றும், பந்தின் பருமன் மிகச்சிறியதே என்றும், நாக...
உள்ளதே அதனை அடிக்குங் கைக்கழி என்றும், குதிரை...
பெரிய தென்றும், செண்டு வெளியிடம் விசாலமானதென்...
வாறெல்லா மிருந்தும், எட்டு அல்லது பத்துத் தடவை அ...
வெளியிடத்தைச் சுற்றிவந்து பந்தினைத் தவறாமல் அடிப்ப...
வேந்தன் ஒருபோதுந் தவறியதில்லை என்றும், இவ்வரிய...
புரிந்துகாட்ட எவரும் முன்வரவில்லை என்றும், இத்தகையவி...
போலோ (Polo) என இக்காலத்தவர் வழங்குவதுபோன்றதென்...
கூறப்பட்டுள்ளன.

இவ்வரிய செய்தியால், அரசர்போன்றார் விரும்பி விளையாடும் ஆட்டமே நிலைச்செண்டு பரிச்செண்டுகள் என்பது தெரியலாம். குதிரையேற்றம்புரிந்து அரசர் பழகும் இடத்துக்குச் 'செண்டு வெளி' என்ற பெயர் வழக்குண்மையும் அறியத்தகும். இவற்றால் சேக்கிழாரும் கம்பரும் கூறிய பரிச்செண்டின் வரலாறு ஒருபடியாக விளங்கும்.

அறிஞர்காள்!

நான் கூறிவந்த பொருளுரைகளால் கல்வியிற் பெரியரான கம்ப நாடர், கடல்போன்ற தம் அரிய கருத்துக்களையும் கற்பனை முதலிய வற்றையும் தம் காப்பியத்தில் வாரி வழங்கியது மட்டுமன்றி, முன் னோரின் சொற்பொருள்களைப் பொன்னேபோற் போற்றிக்கொண்டு அவற்றைச் சீரிய அணிகலன்களாக்கி நமக்கு அளித்தவர் என்பதும் தெரியலாம். இவைபற்றி, உங்கள் முன் கூறுதற்கு நான் குறித்துக் கொண்ட குறிப்புக்களுள், வேறு சிலவும் உண்டு. அவற்றில் ஒன் றிரண்டு பொருள்களே, சிறப்பாக நான் இப்போது பேச நேர்ந்தன. இவை, நாவன்மையுடன் சொற்பொழிவுகள் ஆற்றிய நண்பர்களின் கருத்துக்களை மேலும் வளப்படுத்தக் கூடியன என்றே நம்புகிறேன். நெடுநேரம் இருந்து பொறுமையுடன் கேட்ட உங்கட்கெல்லாம் என் வந்தனங்கள் உரியன வாகுக.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
புதிய அமைப்பு விதிகளும்
ழ்க்கலைஞர்மன்ற (Tamil Academy)
விதிகளும்

உ

பரம்பொருள் துணை

1 தமிழ்க் கலைஞர் மன்றம்

—o—

வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் தமிழர்களை முன்னேச் செய்யும் நோக்கத்துடன், தமிழ்ப் பண்பாட்டில் எல்லாப்பகுதிகளின் சார்பாளர்களை (பிரதிநிதிகளை)க் கொண்டு, இத் தமிழ்க்கலைஞர் மன்றம் அமைக்கப்பெற்றுள்ளது.

(1) சங்ககால மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 49 அறிஞர் இருந்தாற்போல இத் தமிழ்க் கலைஞர் மன்றத்தில் 49 உறுப்பினர்கள் இருப்பார்கள். தொடக்கத்தில் இவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பின்னர் இம் மன்றத்தில் உண்டாகும் காலி இடங்களுக்குரிய உறுப்பினர்களை இத் தமிழ்க் கலைஞர் மன்ற உறுப்பினர்களே, இதற்கென்று கூடி, மறைவு வாக்குப்பதிவு முறைப்படி தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் தமிழ்ச் சங்கச் செயற்குழுவின் ஒப்புதல் பெற்று மன்றத்தில் உறுப்பினரா யிருப்பார்கள்.

(2) இக் கலைஞர் மன்றம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அறிவுரைக் குழுவாக (Advisory Council) கீழ்க்காணும் துறைகளில் வேலைசெய்யும்.

(அ) தமிழ் மொழியின் தூய்மையையும் முன்னே
யும் வளர்த்தல்.

(ஆ) இக்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சி.

(இ) தமிழ்மொழியிலும் தமிழ்இலக்கியத்திலும் ஆ

(ஈ) மதுரைத் தமிழ்ச் சங்கம் விரும்பும் பிற அலுவ

(3) மன்றம், சங்கவேலைகளைக் கவனிக்கத் திங்கள் ஒரு கூடும். இக்கூட்டத்திற்குத் தமிழ்ச்சங்கத் தலைவரே தலைமை த வார். அவர் இல்லாதபோது மன்றத்தினரால் தேர்ந்தெடுக்கப்ட ஒருவர் கூட்டத்திற்குத் தலைமைதாங்குவார்.

(4) மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கூட்டுச் செயலாளர் (Join Secretary) இம்மன்றத்தின் செயலாளராவார்.

(5) தமிழ்க்கலைஞர் மன்றம், தன் வேலைகளைக் கவனித்துக் கொள்ளுவதற்குக் குழுக்களையும், துணைக் குழுக்களையும் அமைத்துக் கொண்டு, விதிமுறைகளையும் வகுத்துக் கொள்ளலாம்.

(6) மன்றத்தின் நடைமுறைச் செலவுகளும் சங்கத்தின் விருப்பப்படி மன்றத்தாரால் செய்யப்படும் வேலைகளுக்காகும் செலவுகளும் தமிழ்ச்சங்க நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

---

2. மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆட்சிக்குரிய விதிகள்

(1) தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று சார்பாளர் (பிரதிநிதிகள்) ஆட்சிக்குழுவில் (Board of Management) இருப்பார்கள். ஆனால், நீலகிரி மாவட்டத்திற்கு 2 சார்பாளர்களும், மதுரை மாவட்டத்திற்கு 3 சார்பாளர்களும், மதுரை நகருக்கு 3 சார்பாளர்களும் உண்டு. இவர்கள் கீழ்க்காணும், ஆட்சி அலுவலர்களைத் (Office bearers) தங்களுள் தேர்ந்தெடுப்பார்கள்.

(1) தலைவர் (2) துணைத்தலைவர் (3) செயலாளர்
(4) கூட்டுச்செயலாளர் (5) பொருளாளர்.

...ட்சிக்குழு உறுப்பினர்களும், ஆட்சி அலுவலர்களும், ...ண்டுகளுக்கு ஒருமுறை, பேரவைக்கூட்டத்தில் (General ...eting) தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(அ) தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் இவற்றின் நலத்திலும் ...றத்திலும் ஆர்வம்கொண்ட, தமிழ்நாட்டிலுள்ள 21 வய ...மற்பட்ட எவரும், சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம். அதற்கு, ...குழுவிடம், அதற்கென விதிக்கப்பட்ட விண்ணப்பத்தாளில் ...ப்பித்துக் கொள்ளலாம். விண்ணப்பத்தை ஒப்புக்கொள் ..., அன்றிக் காரணம் எதுவும் காட்டாமல் மறுக்கவோ, ஆட்சிக் ...வுக்கு உரிமையுண்டு.

(ஆ) இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் குடும்பத்தில் முதன்மையானவரும், புதுக்கோட்டை அரசகுடும்பத்தில் முதன்மை யானவரும் (Senior Member) தமிழ்ச் சங்கத்தில் புரவலர்களாக (Patrons) இருப்பார்கள். தமிழ்ச் சங்கம், கலைஞர் மன்றம் ஆகியவற்றின் கூட்டங்களில் இவர்கள் பங்கெடுத்துக்கொள்ளலாம். ஆனல், இவர்களுக்கு வாக்குரிமை இல்லை.

(4) ஒவ்வொரு உறுப்பினரும் நுழைவுக் கட்டணம் ரூ. 5-ம், ஆண்டுக் கட்டணம் ரூ. 6/-ம் செலுத்தவேண்டும். அவர்களுக்குச் 'செந்தமிழ்' இதழ் இலவசமாக அளிக்கப்படும்.

(5) ஆட்சிக் குழுவினரால் தகுதியுடையவர் எனக் கருதப்படு பவர் எவரும் ரூ. 100/- செலுத்தி வாழ்நாள் உறுப்பினர் (Life Member) ஆகலாம். இவர்களுக்கும் 'செந்தமிழ்' இதழ் இலவசமாக அளிக்கப்படும்.

(6) ஆட்சிக்குழு, சங்கத்தில் எந்த உறுப்பினரையோ அல்லது அலுவலரையோ விலக்குவதற்குப் பேரவைக்குச் சிபாரிசு செய்ய லாம். ஆனல், இந்தச் சிபாரிசை, இதற்கென ஒருமாத முன்னறிவிப் புக் கொடுக்கப்பட்டுக் கூட்டப்பட்ட பேரவைக் கூட்டத்தில் ஆலோ சனைக்கு எடுத்துக் கொள்ளலாம். அக்கூட்டத்தில் பேரவை மொத்த உறுப்பினர்களுக்கு உரிய வாக்குகளில் $\frac{3}{4}$-பங்கு வாக்குகளின் பெரும் பான்மை பெற்று ஒப்புதல் பெறல்வேண்டும்.

(7) ஜனவரியின் முதல் வாரத்திலோ அல்லது முதல் வாரத்திலோ அல்லது ஆட்சிக் குழுவினர் வசதி ... தும் வேறு எந்த நாளிலோ, சங்கத்தின் ஆண்டுக் கூட்ட... பெறும். அப்பொழுது முந்திய ஆண்டில் நடைபெற்ற ச... அலுவல்களைக் குறித்த அறிக்கையைச் செயலாளர் வாசிப்ப... கத்தின் ஆண்டு விழா, ஆண்டுக் கூட்டத்தின் போதோ அல்ல... சிக் குழு குறிப்பிடும் வேறு நாளிலோ கொண்டாடப்படும்.

(8) தலைவர் தம் விருப்பம்போல் பேரவையைக் கூட்ட... 15 உறுப்பினர்கள் ஏதாவது காரணத்தைக் குறிப்பிட்டு, எழு... மூலம் விண்ணப்பித்துக்கொண்டால், செயலாளர் பேரவையைக்கூட... வேண்டும். இவ்வாறு சிறப்புக் கூட்டங்கள் கூட்டப்படுவதற்கு ... நாட்களுக்கு முன்னரே கூட்டத்தின் அலுவல்கள் காட்டப்பட்டு அறி விப்பு அனுப்பப்படுதல் வேண்டும். எல்லாப் பேரவைக் கூட்டங்களி லும், மாவட்டவாரியாக நேர்வாக்குப் பதிவு நடைபெறும். மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வாக்கு (Vote) உண்டு. ஒவ்வொரு மாவட்ட உறுப்பினர்களும் தங்களுள் கலந்துகொண்டு, தங்கள் மாவட்டத்திற்குரிய ஒரு வாக்கைப் பயன்படுத்தலாம். சாதாரணக் கூட்டத்திற்கும், சிறப்புக் கூட்டத்திற்கும் குறைந்த எண்ணிக்கை (Quoram) 50 பேராவது இருத்தல் வேண்டும். குறைந்த எண் ணிக்கையாளர் இல்லாதபோது, கூட்டம் நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படலாம்; அல்லது, கூட்டத் தலைவர், 15 நாட்கள் முன்னறி வுப்புக்கொடுத்து மற்றொரு குறிப்பிட்ட நாளில் கூட்டத்தைக் கூட்ட லாம்; அக் கூட்டத்தில் 'கோரம்' இருப்பினும், இல்லாது போயினும் கூட்டம் நடைபெறும்.

(9) தலைவர் இல்லாதபோது, துணைத்தலைவர் சங்கக் கூட்டத் திற்குத் தலைமை தாங்கலாம். இவ்விருவரும் இல்லாதபோது கூட் டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்கள் தங்களுள் ஒருவரைக் கூட் டத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம். தலைவர், துணைத்தலைவர் அல் லது கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டத்தலைவர் இவர்களுக்கு ஒரு தனிவாக்கு (Casting vote) உண்டு.

சங்கத்தின் கணக்குகள் ஆண்டுக்கொருமுறை தணிக்கை செய்யப்படும். ஆட்சிக்குழுவினால் ஊதியத்துடனே அல் தியமில்லாமலோ அமர்த்தப்பட்ட தணிக்கையாளரைக் ஆண்டுக்கூட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன்னரே மேற்படி கள் தணிக்கை செய்யப்படவேண்டும்.

1) ஆட்சிக்குழு திங்கள் ஒருமுறை கூடிக் கணக்குத் கைகளையும் பிற அலுவல்களையும் கவனிக்கும் கூட்டத்தில் க்கை செய்யப்பட்ட கணக்குகளும், பிற உறுதிப்பாடுகளும் (தீர் னங்களும்) செந்தமிழில் வெளியிடப் பெறும்.

(12) தலைவர் விரும்பும்போது ஆட்சிக்குழு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டலாம்; அல்லது ஆட்சிக்குழு உறுப்பினர் எழுவர் குறிப்பிட்ட ஒரு அலுவலைக் கவனிப்பதற்காகக் கூட்டம் கூட்டப்படல் வேண்டுமென்று விரும்பினால், செயலாளர் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டலாம்.

(13) ஆட்சிக்குழுக் கூட்டத்திற்குக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) 7 பேராகும். கூட்டத்திற்கு 3 நாட்களுக்கு முன்னரே முன்னறிவிப்புக் கொடுக்கப்படல் வேண்டும்.

(14) தலைவர் அல்லது துணைத்தலைவர் இல்லாதபோது ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கச்செய்யலாம். ஒரே அளவு (சமமான) வாக்குப்பதிவு ஏற்படும்போது, கூட்டத் தலைவருக்கு உறுப்பினர் என்னும் முறையில் உள்ள அவரது வாக்குப்போக, தலைவர் என்னும் தகுதிக்குரிய ஒரு வாக்கை (Casting vote) பயன்படுத்தும் உரிமை உண்டு.

(15) தலைவரின் பொதுவான மேற்பார்வைக்கு உட்பட்டுச் செயலாளரின் கட்டுப்பாட்டின்கீழ்ச் சங்க ஊழியர்கள் வேலைபார்த்து வருவார்கள். தலைவர் தமது பொறுப்பைத் துணைத்தலைவரிடம் ஒப்புவிக்கலாம்.

(16) ஆட்சிக்குழு அடுத்துவரும் ஆண்டுகளுக் செலவு திட்டத்தை (Budget)த் தயாரிக்கலாம். தாபே காரணமாகவோ, அல்லது வேறு காரணங்களினாலோ காலி பட்டால், செயற்குழு அலுவலர்களைத் தற்காலிகமாக நி உரிமை ஆட்சிக் குழுவுக்கு உண்டு.

(17) சங்கத்தின் அலுவல்களைக் கவனிப்பதற்காக 4 பே குறையாத துணைக் குழுக்களை அமைத்துக் கொள்வதற்கு ஆ குழுவுக்கு உரிமையுண்டு.

(18) ஆட்சிக்குழு சங்கம் பற்றிய கீழ்க்காணும் செய்திகளை கவனிப்பதற்கு அவ்வப்போது துணைவிதிகளை (Byelaws) ஏற்படுத் லாம். (அ) விடுமுறை விதிகள், (ஆ) தேர்வு விதிகள், (இ) பரிசு, அன்பளிப்புப்பற்றிய விதிகள், (ஈ) செந்தமிழில் வெளிவரும் கட்டுரைகளுக்கு ஊதியம் தருதல், (உ) சங்க அலுவலக மேற்பார்வை, ஆவணங்களை (தஸ்தாவேசுகளை)ப் பாதுகாத்தல், பணம், பிறஉடைமைகள், அலுவலாளர்க்குரிய வேலைகளைப் பிரித்துக் கொடுத்தல்.

(19) தமிழ் இலக்கியத்திற்காகச் சிறந்ததொண்டு செய்பவர்கள் என்று கருதப்படுபவர்களை, ஆட்சிக்குழுவின், உறுதிப்பாட்டின் மீது தலைவர் பாராட்டு (கௌரவ) உறுப்பினர்களாக (Honorary Members) ஏற்றுக்கொள்ளலாம். இப் பாராட்டு உறுப்பினர்கள் சங்கத்திற்குக் கட்டணம் செலுத்தவேண்டுவதில்லை; ஆனால், உறுப்பினர்களுக்குரிய வாக்குரிமையும், சங்கத்தில் எத்தகைய செயற்கூட்டங்களில் கலந்துகொள்ளும் உரிமையும் இல்லை; உறுப்பினர்களுக்குரிய பிற உரிமைகள் இவர்களுக்கு உண்டு.

(20) சங்கத்தின் அலுவல்களை ஆட்சிக்குழுவே மேற்பார்த்து வரும். அதனிடமே சங்கத்தின் உடைமைகள் இருந்துவரும். இவ்வாட்சிக்குழு, தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் இவற்றின் தூய்மை, முன்னேற்றம் பற்றிய எல்லாச் செய்திகளையும் தமிழ்க் கலைஞர் மன்றத்தைக் கலந்தே முடிவுசெய்யும்.

தலைவர் ஒப்புதல்மீது ரூ. 50/– சம்பளத்திற்குட்பட்ட
லைச் செயலாளர் அமர்த்தலாம். ரூ. 50/– சம்பளத்
ற்பட்ட அலுவலரை ஆட்சிக்குழுவைக் கலந்துகொண்டு
லாம். ஆட்சிக்குழுவின் ஒப்புதல்மீது சங்க அலுவலரைத்
நும் உரிமை செயலாளருக்கு உண்டு. ஆட்சிக்குழுவின்
பாட்டின்படி சங்கத்தின்பேரில் சங்கச்சொத்துக்களை விற்க
ங்கவோ, மாற்றவோ செயலாளருக்கு உரிமை உண்டு.

(22) எல்லாக் கட்டணங்கள், நன்கொடைகள், சங்கத்திற்குச்
வேண்டிய பிறதொகைகள் ஆகிய அனைத்தும் செயலாளர் அல்லது
ருளாளரால் பெற்றுக்கொள்ளப்படும்.

(23) எல்லாக் கடிதப் போக்குவரவுகளும் செயலாளர் பொறுப்பாகும். கணக்குகள், உறுப்பினர் ஏடுகள், ஆட்சிக்குழு, பேரவைக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புப் புத்தகங்கள், மற்றும் ஆட்சிக்குழுவினர் விரும்பும் பிறநூல்கள் ஆகிய இவற்றைச் செயலாளர் முறையாக வைத்துக்கொள்வார்.

(24) நடைமுறைச் செலவுபோக எஞ்சியுள்ள தொகையை, ஆட்சிக்குழுவின் இசைவின்மீது சங்கத்தின் பெயரால், செயலாளர் அல்லது பொருளாளர் ஏதாவது ஒரு வங்கியில் (Bank) போடலாம்; அல்லது அரசினர் கடன் பத்திரங்களிலோ, தாவர சொத்துக்கள் வாங்குவதன் மூலமாகவோ, அல்லது முதல் அடைமானத்திலோ (First Mortgage) சேமித்து வைக்கலாம்.

(25) செயலாளர் செக்குகள் கொடுப்பதன் மூலம் சங்கத்தின் கணக்கில் வரவு செலவு செய்யலாம்.

(26) வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு (Budget) மேல் ரூ. 100/–வரை எதிர்பாராச் செயல்கட்காகச் செலவு செய்யத் தலைவருக்கு உரிமை உண்டு. அடுத்து வரும் ஆட்சிக்குழுக் கூட்டத்தில் ஒப்புதலுக்காக இது கொண்டுவரப்பட்டு, ஆட்சிக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(27) வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மேல் ரூ. 10/- வரை எதிர்பாராச் செயல்கட்காகச் செல செயலாளருக்கு உரிமை உண்டு. அடுத்துவரும் ஆட்சிக் டத்தில் ஒப்புதலுக்காக இது கொண்டுவரப்படும்.

(28) எப்பொழுதாவது, தலைவர் பதவி காலியானல் புள்ள நாட்களுக்கு, ஒரு தலைவரை அமர்த்தும் உரிமை குழுவுக்கு உண்டு.

(29) சங்கத்தின் தலைமை நிலையம் மதுரைநகரில் இருந்துவ

(30) ஒவ்வொரு மாவட்டமும், தமிழ்ச் சங்கத்தின் கிளை ஒ றைப் பெற்றிருக்கும்; தேவைப்படின் ஒரு மாவட்டத்திலேயே ப கிளைகள் அமைத்துக்கொள்ளலாம். மாவட்டக்கிளைச் சங்கம், தனக்கும், தன் கிளைகளுக்கும் தேவைப்படும் சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு மாவட்டமும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையோ அல்லது ஆட்சிக்குழுவின் உறுதிப்பாட்டின்படி (தீர்மானப்படி) குறிப்பிட்டகாலங்களிலோ சார்பாளர்களை ஆட்சிக்குழுவுக்கு அனுப்பலாம்.

(31) மாவட்டக் கிளைச்சங்கங்கள் மதுரையிலுள்ள தமிழ்ச்சங்கத்துடன் இணைக்கப்படுதல் (Affiliated) வேண்டும்.

(32) மாவட்டக் கிளைச்சங்கம், தனது மாவட்டத்துள் கட்டணத்தொகைகளை வசூல்செய்து, அவற்றில் $\frac{1}{3}$ பாகத்தைத் தன் செலவுக்காக வைத்துக்கொண்டு, எஞ்சிய $\frac{2}{3}$ பாகத்தை மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குச் செலுத்தல் வேண்டும்.

(33) புதிய ஆட்சிக்குழு தேர்ந்தெடுக்கப்படும்வரை இப்பொழுதிருக்கும் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு, தொடர்ந்து ஆட்சியை நடத்தி வரும்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

ஐம்பத்தோராந் தொகுதி.

Volume 51.

ஜய—மன்மத௵

1954—1955

மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

கடவுள் துணை.

செந்தமிழ்

௩௧-ஆம் தொகுதியின் உள்ளுறை

ழ் வாழ்த்து: 1

ண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ணபாரதி

மரபு: 2

சு. குமாரஸ்வாமி ஆச்சாரி

விமணி தேசிகவிநாயகம் பிள்ளை: 11

ஆர். வீரபத்திரன்

கவிமணி பிரிவுக்கு இரங்கற்பாக்கள்: 28

மதிப்புரை: 31

திருவள்ளுவர் கால வாழ்க்கை நிலை: 32

சு. குமாரஸ்வாமி ஆச்சாரி

இயற்கையைப் பயன்படுத்துதல்: 41

பெ. கா. அப்புஸ்வாமி ஐயர்

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்: 47

ஆ. சிவலிங்கனர்

நாலடியாராராய்ச்சி: 59

சத்தியவாகீசுவர ஐயர்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிருவாகசபைத் தீர்மானங்கள்

மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா; தமிழர்களுக்கு வேண்டுகோள்:

P. T. இராசன்

இலக்கிய வுண்மை: 65

ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

காஞ்சி-கயிலாசநாதர் கோவில்:
டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

இயற்கையைப் பயன் படுத்துதல் 2. சூரியன்:
பெ. நா. அப்புஸ்வாமி ஐயர்

திருவள்ளுவர் கால வாழ்க்கைநிலை:
சு. குமாரஸ்வாமி ஆச்சாரி

மதிப்புரை:

அநுதாபக் குறிப்பு:

வடமொழியில் தமிழ்ச்சொற்கள்:
டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்

கோடைமலைத் தலைவர்கள்: 10
ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை

காஞ்சி-ஏகாம்பரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள்: 111
டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

இயற்கையைப் பயன் படுத்துதல் 3 அணுசக்தி: 119
பெ. நா. அப்புஸ்வாமி ஐயர்

மதிப்புரை: 125
ப. ஜோதிமுத்து

மனோன்மணீயம்: 129
திரு. நா. அப்பணையங்கார்

ரோட்டரி சங்கத்தின் நோக்கங்களும் அதன் வளர்ச்சியும்: 135
கருமுத்து. தி. சுந்தரம்

வள்ளுவர் கண்ட இன்பம்: 14
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

ஐந்திணை அமுதம் 14
டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

மொழி வளர்ச்சி—அரசியலாதரவு: 156
அ. திருமலைமுத்துசாமி

159

லயில் அழுதுணர்ச்சி: 161
வ. சு. து ர சா ப்பிள்ளை

ம் கூடிய சொல்: 181
அண்ணுமலை

ர: 188

ராயன் தில்லைத் திருப்பணிகள்: 190
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

ரத் தமிழ்ச் சங்கம்: 193
இ. பழனியப்பன்

ருவடையில் நிலவும் அருள்: 197
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

க்கைக் கூத்து: 202
டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

மிழ்த்தாய் தந்த செய்தி: 207
இரா. சசிவர்ணம்

ஞ்சணிக மந்திரம்: 211
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

ிருவள்ளுவர்கால இல்வாழ்வும் துறவும்: 218
சு. குமாரஸ்வாமி ஆச்சாரி

ிப்புரை: 222

ாச்செங்கணன் காலம்: 225
டாக்டர். மா. இராசமாணிக்கனுர்

ரநாடு 233
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

ப்புரை: 250

ுரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:

ல்கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:

சிலப்பதிகாரமும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளும்:
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

திருவடிக்கரை:
டாக்டர் மா. இராசமாணிக்கனர்

பறவைகளின் இல்வாழ்வு:
சாமுவேல் ஆபிரகாம்

இயேசுவின் சாயல்:
வி. பழனியப்பன்

மதிப்புரை:

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிருவாக சபைத் தீர்மானங்கள்:

கல்வெட்டும் சைவசமயமும்: 2
டாக்டர் மா. இராசமாணிக்கனர்

சோழநாட்டின் தொன்மை: 3
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

பழந்தமிழ்ப் புலவரும் கடவுள் வாழ்த்தும்: 31
M. பொன்னையா

நக்கீரர்: 32
டாக்டர் மா. இராசமாணிக்கனர்

பழந்தமிழ்ப் புலவரும் கடவுள் வாழ்த்தும்: 327
M. பொன்னையா

சோழநாட்டின் தொன்மை: 33
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

புள்ளினத்தின் புனிதத்தொண்டு: 8
சாமுவேல் ஆபிரகாம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பொதுஅங்கத்தினர் மகாசபைக்கூட்டம். 3

காரைக்குடிக் கம்பர் விழாவில் நிகழ்த்திய தலைமையுரை: 3
மு. இராகவையங்கார்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் புதிய அமைப்பு விதிகளும்
தமிழ்க்கலைஞர் மன்ற (Tamil Acadamy) விதிகளும்

…ழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
	…வசாரசங்கிரகம் … … …	5	0	0
	…த்திரட்டு … … …	3	0	0
	…ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் … …	5	0	0
	…ல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) … …	1	12	0
	…ருணைக்கலம்பகம் … … …	0	6	0
	…சைச்சிலேடைவெண்பா … … …	0	6	0
	…வாரூர் நான்மணிமாலை … … …	0	4	0
	…கிருஷ்ணசரித்திரவிமர்சம் … …	1	4	0
	…ன் னூற்றிரட்டு (செலக்ஷன்) … …	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
	ஐந்திணையைம்பது (உரையுடன்) … …	0	4	0
	கனுநூல் (5) இனியதுநாற்பது (உரை) … …	0	3	0
	புலவராற்றுப்படை … … …	0	3	0
	திருநூற்றந்தாதி (உரையுடன்) … …	0	6	0
	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) … …	0	8	0
	அநுமானவிளக்கம் … .. …	0	10	0
.	அட்டாங்கயோகக்குறள் … … …	0	2	0
2.	பன்னிருபாட்டியல் … … …	0	12	0
5.	நான்மணிக்கடிகை (பழைய உரை) … …	0	4	0
4.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் … …	0	3	0
6.	திருவாரூருலா … … … …	0	8	0
7.	சுகசந்தர்சனதீபிகை … … …	0	12	0
8.	இயற்கைப்பொருட்பாடம் … … …	0	4	0
19.	தேவையுலா … … … …	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) … …	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும் … …	1	0	0
23.	விக்கிரமசோழனுலா … … …	0	8	0
24.	குருமொழிவினாவிடை … … …	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை … …	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம் … …	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை … … …	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை … … …	0	3	0
2.	மநீஷாபஞ்சகம் … … …	0	8	0
6.	உவமானசங்கிரகம் … … …	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும் … …	4	8	0
8.	திருப்புல்லாணிமாலை … … …	0	2	0

40. திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்
41. பொருட்டொகைநிகண்டு ... ...
42. அகராதிநிகண்டு ... ...
43. மேகவிடுதூது ... ...
44. திருக்குற்றாலமாலை ... ...
45. தண்டலையார்சதகம் ... ...
46. இராமோதந்தம் ... ...
47. பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...
48. சேதுநாடும் தமிழும் ... ...
52. கூடற்புராணம் ... ...
53. திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ...
54. அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ...
55. மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... 0
56. பாப்பாவினம் 0
57. மதுரைமும்மணிக்கோவை 0
58. பழனிப் பிள்ளைத்தமிழ் 0
59. கடம்பர்கோயில் உலா 0 6
60. சங்கரநயினார்கோயில் அந்தாதி 0 6
61. கலைசைக்கோவை 0 12
62. பெருந்தொகை 5 0
63. சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... 0 5
64. சிராமலைக்கோவை 0 12
65. மத்யமவியாயோகம் 0 2
67. அமிர்தரஞ்ஜனி 0 2
69. பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... 0 8
70. திருச் சிறுபுலியூருலா 0 12
71. திணைத்தலைவர் நினைவுமலர் 0 10

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களை
கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு
வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளி
நாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4-8-0. இதுவரை 51 தொகுதி
கள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9,
10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள்
உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ. 4—0—0 வீதம்
விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும்
வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன்
தள்ளிக்கொடுக்கப்படும். S. சேஷையங்கார், மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.